ஆசிரியர்:
திருமதி தமிழ்வாணன்

அருள்

தென்னாட்டில் சிறந்த



தெய்விகப் பத்திரிகை



செப்டம்பர்
29ம்
முதல்
கெயிட்டி · பாரத் · சயானி
லிபர்ட்டி
வெங்கடேஸ்வரா மூவீஸ்
அளிக்கும்
அருண் பிரசாத் மூவீஸ்
முகூர்த்த நாள்
டைரக்‌ஷன்
பி. மாதவன் B.A
செந்தில் ரிலீஸ்

கோடையிலே இளைப்பாற்றிக்
　　கொள்ளும் வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே
　　நிழல் கனிந்த கனியே
ஓடையிலே ஊறுகின்ற
　　தீஞ்சுவைத் தண்ணீரே
உகந்த தண்ணீ ரிடை மலர்ந்த
　　சுகந்த மண மலரே
மேடையிலே வீசுகின்ற
　　மெல்லியபூங் காற்றே
மென்காற்றில் விளைசுகமே
　　சுகத்திலுறும் பயனே
ஆடையிலே எனை மணந்த
　　மணவாளா பொதுவில்
ஆடுகின்ற அரசே என்
　　அலங் கலணிந் தருளே



தமிழ் மாத முதல் நாள் வெளிவருகிறது

இந்த இதழில்

4 களவழி நாற்பது

8 பக்தனைக் காப்பதே பகவானின் குறிக்கோள்

9 இறைவன் அருளை எப்படிப் பெறுவது?

10 விதியின் பிழை

18 ஈன்றவளை வழிபட்டால்?

19 இந்தியாவின் சிறப்புக்கள்

20 நாகஸ்வர இசைவாணர்கள்

23 கொடுத்த வாக்கைக் காப்பாற்ற வேண்டாமா?

25 கிராமங்களில் புத்தொளி

27 பசித்திரு! தனித்திரு! விழித்திரு!

28 பழைமையும் புதுமையும்

30 செல்வமும் துன்பத்தைத் தரலாம்

32 இறைவன் கருணை காக்குமடா!

அருள்—2
கருணை—1
ஐப்பசி பிலவங்க

அக்டோபர்
15—10—67
விலை: 25 காசு

திருமுருக கிருபானந்தவாரியார்



களவழி நாற்பது

வனத்தினல் விலங்குகள் வாழ்கின்றன; விலங்குகளால் வனம் வளம் பெறுகின்றது. வனம் இல்லையேல் விலங்குகள் வாழ முடியாது. விலங்குகள் இல்லையேல் வனத்தை மக்கள் அழித்து விடுவார்கள். ஆகவே ஒன்றுக்கு ஒன்று தொடர்புடையது.

மன்னனும் புலவனும்

இதுபோல் அரசனிடத்திலே புலவன் வாழ்ந்து மதிப்பையடைவான். புலவனல் அரசனுக்குப் பெருமையுண்டாகும். அரசாங்கப் புலவன் என்றும் மன்னவர் மதிக்கத்தக்கவன் என்றும் புலவனுக்கும் புகழ். உயர்ந்த புலவன் இருந்தால் இப்படி ஒருவருக்கு ஒருவரால் உயர்வு ஏற்படுகின்றது. வனம் போல, மன்னவன். வனத்தில் வாழும் சிங்கம் போன்றவல் புலவன் வனத்தில் விலங்கு வாழ்வதனல் காட்டை உலகத்தவர் புகழ்வர். "அது ஆனைக் காடு," "அக்காட்டில் சிங்கம் வாழ்கின்றது" என்று கூறுவர்.

சேரனும் பொய்கையாரும்

ஒரு சிறந்த புலவர் இருந்தால் மன்னவனுக்கு மட்டற்ற புகழ் உண்டாகும். சடையப்ப முதலியாரால் கம்பருக்கு நன்மை. கம்பரால் சடையப்பருக்கு அழியாத புகழ் உண்டாயிற்று.

களவழி நாற்பது என்பது சிறைச்சாலைக்குள் பிறந்த அரும்பெரும் பாடல்கள். அங்கு எழுதக் காரணம் என்ன?

அக்காலத்தில் அரசர்கள் தக்க புலவரைத் தமது சபையில் வைத்துப் போற்றிப் புகழ்ந்து சிறப்பித்தார்கள்: சேர நாட்டைச் சேரமான் கணைக்காலிரும்பொறை என்ற மன்னவன் அரசு புரிந்து வந்தான். அம்மன்னனிடம் பொய்கையார் என்ற புலவர் பெருமான் இருந்தார். அவர் கற்றவர்க்குத் திலகம் போன்றவர்; அறிவாற்றலில் சமானம் இல்லாதவர். தேனினும் இனிய செந்தமிழ்ப் பாடல்கள் பாடும் தனிப்பெருஞ் சிறப்புடையவர். பொய்கையாருடைய புகழ் மணம் பூதலம் எங்கும் பரவியிருந்தது. இவர் நண்பராக இருந்தபடியால் கணைக்காவிரும்பொறைக்கு எல்லையில்லாத பெருமை ஏற்பட்டிருந்தது.

சோழனின் மமதை

அதே சமயம் சோழவள நாட்டின் தலைநகராகிய உறையூரில் செங்கணான் என்ற சோழன் ஆண்டு வந்தான். அவன், 'பொய்கையாருடைய தொடர்பினால் சேர மன்னனனுக்குப் புகழ் ஏற்பட்டுள்ளது. ஆதலால் நாமும் பொய்கையாரை அழைத்து, அவரை நமது சபையில் வைத்துப் பாராட்டி, அவரிடம் தமிழ் பயின்று புகழ்பெற வேண்டும்' என்று கருதினான்.

அப்படிக் கருதிய அவன் தானே சென்று புலவரைத் தொழுது அழைப்பது முறை. அரசன் சிறிது தருக்குடையவன்; தான் என்ற மமதையுடையவன். புலவரை அழைக்கவேண்டிய முறையறியாத முரட்டு மன்னன்: தோள் வலியாலும் வாள் வலியாலும் படைவலியாலும் தான் பெரியவன் என்ற அகங்காரத்தால் தலை கிறுகிறுத்தவன். புலவரை அழைத்து வருமாறு ஒரு தூதனை ஏவினான். அத் தூதன் சேர நாடு சென்று பொய்கையார் என்ற புலவரைப் பார்த்து, "ஐயா, எங்கள் சோழ மன்னன் செங்கணான் தங்களைத் தன்பால் வந்து தங்கியிருக்குமாறு அழைக்கின்றார். சேரநாட்டைப் பார்க்கினும், சோழநாடு வளமையுடையது. சேரனைப் பார்க்கிலும் சோழ மன்னன் சிறப்புடையவன். ஆகவே புறப்பட்டு வாருங்கள்" என்றான்.

புலவர் மறுப்பு

புலவர் அந்த ஏவலனைப் பார்த்து, "அப்பா, நான் என் நண்பன் கணைக்காவிரும்பொறையை விட்டு நீங்கியிரேன். ஆகவே வருவதற்கு அனுகூலம் இல்லை என்று உங்கள் மன்னவனுக்குச் சொல்" என்றார். தூதன் போய்ச் சோழனிடம் புலவர் வர மறுத்ததை யுரைத்தான்.

சோழன் சீற்றம்

சோழனுக்கு மிக்க வருத்தம் உண்டாயிற்று. மீளவும் அத் தூதனை "சேரனிடம் போய், புலவனை அனுப்பிவைக்குமாறு கூறு" என்று அனுப்பினான்.

தூதன் சேரனிடம் வந்து பணிந்து, "ஐயா! பொய்கையாரை அனுப்பிவைக்குமாறு எங்கள் மன்னர்பிரான் கூறினார்" என்றான். "தூதனே! புலவரைப் போம் என்றும் இரும் என்றும் கூற எனக்கு உரிமையில்லை. அவர் விரும்பினால் அழைத்துப் போ" என்றான் சேரன்.

தூதுவன் இதனைச் சோழனுக்கு அறிவித்தான். சோழனுக்குச் சீற்றம் எழுந்தது. "புலவனுக்கும் சேரனுக்கும் என்ன மமதை? என் சொல்லை மதித்தார்கள் இல்லை. என்னை அலட்சியம் செய்துவிட்டார்கள். நீ போய்ச் சேரனைப் போருக்குவரச் சொல்" என்றான்.

சேர சோழப் போர்

சேரன் போருக்கு வந்தான். சேரனுக்கும் சோழனுக்கும் கடும் போர் நேர்ந்தது. சோழன் எல்லா வகையிலும் வலிமை மிகுந்தவன். அதனால் சேரனை வென்று சிறையில் அடைத்து விட்டான். கணைக்கால்இரும் பொறை என்ற சேரர்கோன் சிறையில் கிடந்து வாடினான்.

களவழி நாற்பது

பொய்கையாரையும் பிடித்துச் சிறையில் அடைத்துவிட்டான். மிகப் பெரும் புலவராகிய பொய்கையார் தான் சிறைப்பட்டது பற்றி வருந்தினார் இல்லை. தன்னுடைய நண்பன் சேரன் தன் பொருட்டுச் சிறை புகுந்தது பற்றிப் பெரிதும் வருந்தினார். சேர மன்னனுக்கு விடுதலை கிடைக்குமாறு களவழி நாற்பது என்ற நூலைப் பாடினார். அதனைச் சோழன்பால் அனுப்பினார். அந்த அரிய நூலைக் கண்ட செங்கணான் பெரிதும் உவகை கூர்ந்தான். உடனே சிறைச்சாலைக்கு ஓடி வந்தான்; சிறையில் இருந்த புலவரை வணங்கினான். அவரைச் சிறையிலிருந்து விடுவித்தான்; அவரைப் பாராட்டினான். ''புலவர் பெருமானே! தாங்கள் இணையற்ற அறிஞர். தங்கட்கு நான் எதையுஞ் செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அரிய களவழி நாற்பது என்ற நூலினால் நான் பெரிதும் மகிழ்கின்றேன். தங்கட்கு நான் செய்ய வேண்டியது யாது?' என்று வினவினான்.

சேரன் விடுதலை

பொய்கையார், ''சோழவேந்தனே! எனக்கு எப்பொருளுந் தேவையில்லை. என் உயிரினும் இனிய நண்பர் கணைக்காலிரும்பொறையைச் சிறையிலிருந்து விடுவித்தருள்!'' என்றார். சோழ மன்னன் ''அப்படியே'' என்று கூறிச் சேரமன்னனை விடுதலை செய்யும் பொருட்டுப் பொய்கையாருடன் புறப்பட்டான்.

மானமே பெரிது

அந்த நேரத்தில் சிறையில் இருந்த சேரர் சிறைக்காவலனைப் பார்த்து, ''தாகவிடாய் அதிகரித்துளது. சிறிது தண்ணீர் கொடு'' என்று கேட்டார். கேட்டவர் மன்னர் என்பதையும் அவருடைய பெருமிதத்தையும் எண்ணிப்பாராத அவ் வேலைக்காரன் அலட்சியமாகவும் தாமதமாகவும் சென்று ஓர் ஏனத்தில் நீர் கொணர்ந்து இடக்கரத்தில் நீட்டினான்.

இதனைக் கண்ட சேரமன்னன் மனம் மிகவும் வருந்தியது, ''கேவலம் இவ்வேலைக்காரன் என்னைச் சிறிதும் மதியாமலும் ஒரு பொருளாக எண்ணாமலும் அசட்டை செய்து தாமதித்துத் தண்ணீர் கொணர்ந்து இடக்கரத்தில் நீட்டுகின்றான். இத்தண்ணீரைக் குடித்து இனி உயிர் வாழ வேண்டுமா? உயிரினும் மானம் பெரிதல்லவா? தெய்வமே! இனி யான் வாழ மாட்டேன்; உன் பாதத்திற்கு வருகின்றேன்!'' என்று கூறி 'ஈசனே, என்று கண்களை மூடினார். உயிர் பிரிந்து விட்டது.

சோக நாடகம்

சோழனும் பொய்கையாரும் அதே நேரத்தில் அவரைச் சிறையிலிருந்து விடுவிக்க வந்தார்கள். அவர் உடம்பாகிய சிறையிலிருந்தே தன்னை விடுவித்துக் கொண்டு புறப்பட்டுவிட்டார்.

தனது நண்பன் ஆவி அகல்வதைக் கண்டார்பொய்கையார். 'ஆ, நண்பா!' என்று வாய்விட்டு அலறினார்; அவர் அருகில் அமர்ந்து கண்களை மூடினார்; அவ்வளவு தான். பொய்கையார் ஆவி

பிரிந்துவிட்டது. இந்தத் துன்பக் காட்சியைச் சோழமன்னன் கண்டான்; ''அந்தோ கெட்டேன்! மானத்திற்காக இவர் உயிர் விடுத்தார். நண்பரின் மரணத்தைக் கண்டு புலவரும் மாண்டார். இத்தகைய ஒப்பற்ற உத்தம நண்பர்களைப் பிரிக்க நான் முயன்றேன். என்னால் இவர்கள் மரணமுற்றார்கள். இப்பழி பாவம் என்னை விட்டு அகலாவே! நான் அறியாமையாலும் அகங்காரத்தாலும் கெட்டேன். தெய்வமே! என்னை மன்னிக்க வேண்டும். இவர்களுடைய ஆன்மாக்கள் சாந்தியடைக'' என்று வேண்டினான்.

'' மயிர்நீப்பின் வாழாக்
கவரிமா அன்னார்
உயிர்நீப்பர்
மானம் வரின்''

என்ற திருவள்ளுவரின் திருவாக்குக்குச் சேரமன்னன் இலக்கியமாக நின்றான். ○

ஹிந்துப் பண்டிகைகள்

போகிப் பண்டிகை
உத்தராயண புண்யகாலம்
தைப் பொங்கல்
கனு-மாட்டுப் பொங்கல்
தைப்பூசம்
தை அமாவாஸ்யை
இரத சப்தமி
மாசிமகம்
மஹா சிவராத்திரி
காரடையான் நோன்பு
ஹோலிப் பண்டிகை
பங்குனி உத்திரம்
தெலுங்கு வருடப்பிறப்பு
தமிழ் வருடப்பிறப்பு
ஸ்ரீராம நவமி
ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீராம நவமி
சித்திரா பௌர்ணமி
அக்னி நக்ஷத்ர ஆரம்பம்
அக்ஷயதிரிதியை
வைகாசி விசாகம்
அக்னி நக்ஷத்திர முடிவு
பௌச்சியம்மன் வாதி
ஆனித் திருமஞ்சனம்
தக்ஷிணாயனபுண்யகாலம்
வியாஸபூசை
பதினெட்டாம் பெருக்கு
ஆடி அமாவாஸ்யை
திருவாடிப்பூரம்
கெருட பஞ்சமி
மதுரை புட்டுத்திருநாள்
வரலக்ஷ்மி விருதம்
ஆவணி அவிட்டம்
காயத்திரி ஜபம்
சங்கட ஹரசதுர்த்தி
கோகுலாஷ்டமி
ஸ்ரீ ஜெயந்தி
சாமோபாகர்மம்
ஸ்ரீ விநாயகர் சதுர்த்தி
ரிஷி பஞ்சமி
மாமஹேசுவர விருதம்
மஹாளய பக்ஷாரம்பம்
மஹாபரணி
மத்யாஷ்டமி, மஹாவியதீபாதம்
மஹாளய அமாவாஸ்யை
நவராத்திரி கொலு ஆரம்பம்
சரஸ்வதி ஆவாஹனம்
துர்க்காஷ்டமி
மகாநவமி சரஸ்வதி பூசை
விஜய தசமி, மகா சிரவணம்,
ஸ்ரீ வைஷ்ணவ சரஸ்வதி பூசை
ஸ்ரீ வைஷ்ணவ விஜயதசமி
விஷு புண்யகாலம்
இரவு நகர சதுர்த்தி ஸ்நானம்
தீபாவளிப் பண்டிகை
ஸ்கந்தஷஷ்டி
சிலுகத்துவாதசி
கடமுகஸ்நானம்
ஸ்ரீ பாஞ்சராத்ரதீபம்
வைக்கம் மஹாதேவாஷ்டமி
ஸ்ரீ கைசிக ஏகாதசி
பரணி தீபம்
கிருத்திகா தீபம்
ஹனுமத் ஜெயந்தி

இறைவனுடைய திருவருளை முழுமையாக நம்பி வாழுவோரே பக்தர்கள் என்பதாக அழைக்கப் பெறுகிறார்கள்.

இறைவனை ஒருவன் சரணடைந்து விட்டால், அவனுடைய பிரச்னைகளை எல்லாம் தீர்த்து வைத்து அவனைக் காப்பாற்றும் பொறுப்பை, அந்த இறைவனே ஏற்றுக்கொள்கிறான்.

ஆனால், ஒன்று; சரணாகதி முழுமையானதாய் இருந்தால்தான், இறைவன் முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்வான். அரைகுறையான சரணாகதியாய் இருந்தால், இறைவனும் அரைகுறையான பொறுப்புக்களைத் தான் ஏற்றுக்கொள்வான்.

அதாவது, தம்முடைய பொறுப்புக்களில் எவ்வளவை நாம் மனப்பூர்வமாக இறைவனிடம் ஒப்படைக்கிறோமோ, அவ்வளவை மட்டுமே அவன் ஏற்றுக் கொள்கிறான். அதற்கு மேல், நாம் ஒப்படைக்காத பொறுப்பை அவன் நம்மிடமிருந்து வலியப் பிடுங்கிக் கொள்வதில்லை.

எனவே, நம்முடைய பிரச்னைகள் அனைத்திலிருந்தும் நாம் ஒருங்கே விடுபட்டு நிம்மதியாக வாழ விரும்புவோமாயின், அவற்றை இறைவனிடம் ஒப்படைத்து விட்டுச் சும்மா இருப்பதைக் காட்டிலும் சிறந்த வழி இன்னொன்று கிடையாது.

ஆனால், அப்படிச் சும்மா இருப்பதற்கு எல்லாராலும் இயலாது. அதற்கு இறைவனிடத்தில் நமக்கு எல்லையற்ற நம்பிக்கை இருக்க வேண்டும். அந்த நம்பிக்கையின் வலிமைக்குத் தக்கபடிதான், சரணாகதியும் பயன் உள்ளதாக அமையும்.

இறைவனுடைய திருவருளையே முழுமையாக நம்பி வாழ்பவர்களுக்குத்தான், பக்தர்கள் என்று பெயர். இந்தப் பக்தர்களுக்கு யாதொரு குறையும் வராமல், அல்லும் பகலும் அவர்களுக்குத் தோன்றாத் துணையாக இருந்து, அவர்களைக் காப்பாற்றி வருவது ஆண்டவனது இயல்பு. பகவான் தனக்குச் செய்த அபசாரங்களைக் கூடப் பொறுத்துக் கொள்வார்; தன் பக்தர்களுக்கு ஒருவன் அபசாரம் செய்தால், அதைச் சிறிதும் அவர் பொறுக்க மாட்டார்.

பக்தனைக் காப்பதே பகவானின் குறிக்கோள்

பஞ்சபாண்டவர்கள் கண்ண பரமாத்மாவின் பக்தர்கள். தேவகியும் வசுதேவரும் அவருடைய தாய் தந்தையர். ஆனால், அந்தத் தாய் தந்தையர்களைக் காட்டிலும், பக்தர்களாகிய பாண்டவர்களுக்குத்தான் அவர் இடையறாது உதவி புரிந்து வந்தார். மிகக் கொடுமையான பாரதப் போரிலும், அவர்களுக்கு எவ்விதத் தீங்கும் நேர்ந்து விடாதபடி, அவர்களைத் தன் கண் இமையில் வைத்துக் காப்பாற்றினார். அந்தக் கதையைப் படித்தாலே நம்பால் இறைவனது திருவருள் பெருகும்.

தன்னலமற்ற, தூய்மையான உள்ளத்தால் இறைவனை வழிபடுவதுதான், எவ்விதமான கைம்மாறும் கருதாத பக்தி.

இறைவன் அருளை எப்படிப் பெறுவது?

தூய்மையான உள்ளம், அந்த உள்ளத்தில் தூய்மையான பக்தி, இவ்விரண்டும் தான் இறைவனது அருளைப் பெறுவதற்குத் துணை புரியக்கூடிய சாதனங்களாகும்.

தன்னலமற்ற உள்ளமே தூய்மையான உள்ளம். தன்னலமற்ற பக்தியே தூய்மையான பக்தி. அதாவது, இறைவனிடம் எந்தவிதமான கைம்மாறும் எதிர்பாராத பக்தி.

பக்தர்களில் மூன்று வகையினர் இருக்கின்றனர். முதலாவது, பண வசதி படைத்தவர்கள்; இரண்டாவது. உடல் வலிமை உள்ளவர்கள்; மூன்றாவது, இரண்டும் இல்லாதவர்கள்.

பணம் படைத்தவர்கள் தம்முடைய செல்வத்தை இறைவனுக்காக அர்ப்பணம் செய்ய வேண்டும். அதாவது, ''பணம் என்னுடைய குறிக்கோள் அல்ல; இறைவனே என்னுடைய குறிக்கோள்'' என்பதை அவர்கள் செய்கையில் காட்டவேண்டும். இதற்காக, இறைவனுக்குக் கோயில் கட்டுதல், குளம் வெட்டுதல், திருவிழா நடத்துதல், வழிபாடு இயற்றுதல், இறைவனது அடியார்களுக்கு அன்னமிடுதல் போன்ற காரியங்களில் அவர்கள் தம் செல்வத்தைத் தியாகம் செய்ய வேண்டும். அப்படித் தியாகம் செய்யும் அளவுக்கு, இறைவனது திருவருள் அவர்கட்கு எளிதில் கிடைக்கும்.

அடுத்தபடியாக உடல் வலிமையுள்ளவர்கள், தம் உடலை இறைவன் தொண்டுக்கே அர்ப்பணம் செய்ய வேண்டும். உண்ணா நோன்பு இருத்தல், சிவராத்திரி, ஏகாதசி போன்ற காலங்களில் இராக் கண் விழித்தல், இறைவனது திருத்தலங்களுக்குக் கால் நடையாக யாத்திரை செல்லுதல், பழனி, திருப்பதி போன்ற மலைகள்மீது ஏறுதல், புனித நதிகளில் நீராடுதல், மலைவலம் வருதல்—இவையெல்லாம் உடல் வலிமையுள்ளோர் கடைப்பிடிக்க வேண்டிய சாதனைகளாகும். இச்சாதனைகளால் இறைவனது திருவருளுக்கு அவர்கள் இனிது ஆளாகலாம்.

பணபலமோ உடல்பலமோ இல்லாதவர்கள், இறைவனது திருவுருவை மனத்தால்சிந்தித்து, அவனது திருப்புகழை வாயால் பாட வேண்டும். அதுவே அவர்களுக்குத் திருவருளைக் கூட்டுவிக்கும்.

சிறுகதை

விதியின் பிழை

பெ. தூரன்

முத்துசாமி மறுபடியும் கைதியாகச் சிறைக்குள்ளே புகுந்தபோது அங்கிருந்தவர்கள் அனைவரும் ஆர்சரியத்தில் முழுகிவிட்டார்கள். அவன் விடுதலையாகி ஒரு மாதந்தான் ஆயிற்று. அதற்குள்ளே எதற்காக அவன் மீண்டும் சிறைக்குள்ளே வர வேண்டும்? அவன திருடன் அல்ல; குடிகாரன் அல்ல; உண்மையில் அவனைப்போல நல்ல நடத்தை உடையவர்கள் அந்த ஜெயிலுக்குள்ளே யாரும் இருந்ததில்லை.

முத்துசாமி ஒரு மாதத்திற்கு முன்புவரை அந்தச் சிறைக்குள்ளே இருந்தபோது யாரிடமும் அதிகமாகப் பேச மாட்டான். தனக்கு விதித்திருந்த வேலை எவ்வளவு கடினமானதாக இருந்தாலும் அதைப்பற்றி முணுமுணுக்காமல் மௌனமாகச் செய்து கொண்டிருப்பான். "இந்த வேலைகளையெல்லாம் இன்றைக்கே முடித்தாக வேண்டும்" என்று ஜெயில் வார்டரோ மற்ற அதிகாரிகளோ அவனிடம் சொல்ல வேண்டியதுதான் தாமதம், அவன் உடனே செய்யத் தொடங்கிவிடுவான்.

அவன்மேல் குற்றம் சாட்டப்பட்டு விசாரணை நடந்துகொண்டிருந்த நாட்களில் அவன் பதற்றமும் ஆத்திரமும் கொண்டிருந்தது மெய்தான். ஆனால் அவன் குற்றவாளிதான் என்று தீர்மானிக்கப்பட்டுத் தண்டனை அடைந்ததும் அவனுடைய போக்கே முற்றும் மாறுதலடையலாயிற்று. அவன் உள்ளம் முறிந்துபோய், சோர்வும் நம்பிக்கையற்ற நிலையும் சூழ்ந்தவன் போல் காணப்பட்டான். அந்த நிலையிலே அவன் ஜெயில் அதிகாரிகளின் ஏவலின்படி யந்திரம் போல் நாட்களைக் கழிக்கப் பழகிக்கொண்டதில் வியப்பில்லை.

முத்துசாமி முன்னால் சிறைப்பட்டது ஒரு கொலை சம்பந்தமாக. கொலை செய்தவன் அவனே என்று விசாரணையில் ஊர்ஜிதமாகி அவனுக்கு ஆயுள் தண்டனை கிடைத்தது; அப்பொழுது அவனுக்கு வயசு இருபதுதானகையால் அவனிடம் பரிவு காட்டிய நீதிபதிகள் அவனுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கவில்லை.

சிறைச்சாலையில் அவன் நடந்துகொண்ட விதத்தைக் கவனித்தவர்கள் அவன் கொலை செய்திருக்க முடியுமா என்று சந்தே

சிறையிலிருந்து வெளிவந்தவன்
மீண்டும் சிறைக்கே
விரும்பிப் போனான்.
ஏன்? அதுதான் இந்தக் கதை!

கப்பட்டார்கள். அவனிடத்திலே கோபம் முதலிய வெறிக் கிளர்ச்சிகள் கட்டுக்கு மீறி எழுந்ததை யாரும் கண்டதில்லை. ஈ, எறும்புக்குக்கூட ஹிம்சை செய்யக் கூடியவனாகத் தோன்றவில்லை. அதனால் அவன் கொலைக் குற்றத்திற்காகத் தண்டனை அடைந்தது ஒரு புதிராகவே இருந்தது.

அவன் ஒழுங்காகவும் தவறு இல்லாமலும் நடந்துகொண்டதால் அவனுக்குக் கிடைத்திருந்த இருபத்தைந்து வருஷ ஆயுள் தண்டனை கொஞ்சங் கொஞ்சமாகப் பதினைந்து வருஷங்களாகக் குறைந்தது. அந்தக் காலத்தைச் சிறையில் கழித்துவிட்டு அவன் ஒரு புதிய ஆவலோடு வெளியேறினான்.

தண்டனை முடியும் காலம் நெருங்க நெருங்க, அவன் என்றும் இல்லாத உற்சாகங் காட்டினான். இயல்பான அடக்கத்தையும் மீறிக்கொண்டு அந்த உற்சாகம் வெளிப்பட்டது.

அந்தச் சிறையிலே ஆயுள் தண்டனை அநுபவிக்கும் வேறு சிலரும் இருந்தார்கள். அவர்களில் மாரியப்பன் ஒருவன். வாழ்க்கையிலே கசப்பேறிப்போன முதியவன் அவன். ஆனால் நல்ல அரட்டைக்காரன். வம்பளக்காமல் சும்மா இருக்க முடியாது. அவன் பேச்சிலே அவனுடைய உள்ளத்தில் நிறைந்துள்ள கசப்புத் தாராளமாக வெளியாகும். யாரிடத்திலும் நெருங்கிப் பழகாமல் அடக்கமாக ஒதுங்கியிருந்த முத்துசாமியுடனும் அவன் நாலு

வார்த்தை பேசிப் பதில் வாங்கா மல் விடமாட்டான்.

முத்துசாமி விடுதலையாகி வெளியே புறப்படும்போது மாரி யப்பன் அவனிடம் பேச்சுக் கொடுத்தான்: ''முத்துசாமி, வெளியே போய் என்ன செய்யப் போகிருய்?''

''என்னுடைய நிலம் எனக் காகக் காத்துக் கொண்டிருக்கும். அதை நான் உழப் போகிறேன்'' என்று உள்ளக் கிளர்ச்சியோடு முத்துசாமி பதில் சொன்ஞன்.

''அட போ அப்பா, நிலம் உனக்காகக் காத்திருக்குமா? இப் படியெல்லாம் ஆசைப் பட்டு ஏமாந்து போகாதே. ஆனல் நீ என்ன வேண்டுமானலும் செய்; கல்யாணம் மட்டும் பண்ணிக் கொள்ளாதே'' என்ருன் மாரி யப்பன்.

இதைக் கேட்டதும் முத்து சாமி திடுக்கிட்டான். பதினைந்து ஆண்டுகளாக அடிமனத்திலே அழுந்திக் கிடந்த ஏதோ ஆசை யால் கட்டுண்டு பதில் கூருமல் நின்றிருந்தான்.

''புத்தியுள்ளவனுக இருந்தால் கல்யாணத்திலே மாட்டிக்கொள் ளாதே. பின்னலே என் கதி தான் உனக்கும் வரும். அப் புறம் இந்த ஜெயிலே நல்ல தென்று தோன்றும்'' என்று சொல்லி மாரியப்பன் போய் விட்டான்.

இவ்வாறு சொல்லி வழியனுப் பிய மாரியப்பன்கூட முத்து சாமியை மறுபடியும் ஜெயிலுக் குள் பார்த்தபோது திகைத்துப் போனுன்! முத்துசாமியிடம் தனித்துப் பேசி விஷயத்தை அறிய வேண்டும் என்ற ஆவல் உந்தியது.

முத்துசாமி சிறைக்குள் வந்த இரண்டாம் நாளே மாரியப்ப னுக்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது. ''முத்துசாமி, வெளியுலகத்தைவிட ஜெயிலே மேலென்று தெரிந்து வந்து விட்டாயா?'' என்று பேச்சைத் தொடங்கினன்.

''ஆமாம், மாரியப்பா, எனக்கு ஜெயில்தான் சரியான இடம்'' என்ருன் முத்துசாமி.

வாழ்க்கையிலே கசப்பேறிய மாரியப்பனையும் இந்தப் பதில் தூக்கிவாரிப் போட்டது.

அன்று வழக்கத்திற்கு மாருக முத்துசாமி தன் உள்ளத்தைத் திறந்துகாட்டத் தயாராக இருப் பதுபோல் தோன்றியது. தனது நிலைமையை யாரிடமாவது அப் பொழுது கூருவிட்டால் அவ னுக்கு மன அமைதியுண்டாகாது போல அவன் காணப்பட்டான். அதனல் அவனே தொடர்ந்து பேசலானன்: ''ஏன் மாரியப்பா, நான் நினைக்கிறது சரியென்று உனக்குப் படவில்லையா?''

''ஆமாம், ஒரு மாசத்துக் குள்ளே அப்படி என்ன குற்றம் செய்துவிட்டாய்?''

''குற்றம் செய்ய ஒரு மாசம் வேண்டுமா? ஒரு நாளிலே எத்தனை குற்றம் செய்ய முடி யாது? கொலைகூடச் செய்துவிட லாம்.''

''முத்துசாமி, அது எனக்குத் தெரியாதா என்ன? ஆனல் நீ அப்படிச் செய்வாயா என்பது தான் கேள்வி.''

''நான் இந்தத் தடவை ஒரு பெரிய குற்றம் செய்துவிட்டுத் தான் வந்திருக்கிறேன்'' என்று கூறிப் பெருமூச்செறிந்தான் முத்துசாமி.

''நிஜமாகவா? எத்தனை பேரைக கொலை செய்தாய்?'' என்று மாரியப்பன் கேட்டான்.

கொலை என்ற வார்த்தை காதில் விழுந்ததும் முத்துசாமி நடுங்கினன். பிறகு சமாளித்துக்

கொண்டு பேசலானான்: ''பத்து வயசுப் பையன் ஒருவனைக் கொலை செய்யப் போனேன். ஆனால் அதற்குள் எல்லாரும் வந்து குழந்தையைக் காப்பாற்றி விட்டார்கள்.''

''குழந்தையையா? அதுவும் நீயா குழந்தையைக் கொல்லப் போனாய்?'' வாழ்க்கையிலே எந்தக் கொடுஞ்செயலும் நடக்கும் என்ற ஒரே நிச்சயத்தில் இருந்த மாரியப்பன்கூட இதை நம்பத் தயங்கினான்.

''ஆமாம், பத்து வயசுக் குழந்தைதான். அது என் குழந்தையாகக்கூட இருந்திருக்கலாம். அதைத்தான் கொல்லப்போனேன்'' என்று கூறிச் சிந்தனையில் மூழ்கினான்.

''அது யார் குழந்தை?''

''என் சிற்றப்பனுக்கு ஒரு மகன். ராமசாமி என்று பெயர். அவன் குழந்தை அது.''

''தாயாதிக் காய்ச்சலா? அப்படிச் சொல்லு. அவன் உன் பூமியையெல்லாம் அபகரிக்கப் பார்த்தானா?'' மாரியப்பனுக்கு இப்பொழுது விஷயம் விளங்கியதுபோல் இருந்தது.

''ராமசாமி அந்தச் சூழ்ச்சியிலே சேர்ந்திருந்தானோ என்னவோ தெரியாது. என் சிற்றப்பன்தான் அப்படிச் சூழ்ச்சி செய்தவன்.''

''அவனும் சேராமலா இருப்பான்? இப்போது உன் பூமியெல்லாம் என்ன ஆச்சு?''

''எனது சொத்தையெல்லாம் அந்தக் குழந்தைக்கு எழுதி வைத்துவிட்டேன்.''

''எந்தக் குழந்தைக்கு?''

''நான் கொலை செய்யப் போனேனே, அதே குழந்தைக்குத்தான்.''

''என்ன முத்துசாமி, நீ சொல்வது எனக்குப் புதிராக இருக்

கிறது. குழந்தைக்கு உனது சொத்தை யெல்லாம் எழுதி வைத்துவிட்டுப் பிறகு ஏதுக்கு அதைக் கொல்லப் போனுய்?''

''அந்தக் குழந்தைக்கு என் சொத்தையெல்லாம் கொடுக்க வேண்டுமென்பது என் ஆசை. அதனுல் எழுதி வைத்தேன். பிறகு அதைக் கொல்லப் போன தெல்லாம் தண்டனை பெறுவ தற்கு ஒரு வழியாகத்தான்.''

''என்ன?'' என்று மறுபடியும் கேட்டான்.

''அந்தக் குழந்தைக்குத் தீங்கு செய்ய எனக்கு உத்தேசமே கிடையாது. சும்மா அப்படிப் பாவனை பண்ணினேன். எனக்கு வேண்டியது ஜெயில்தானே?''

''ஜெயிலா?''

முத்துசாமி விஷயம் மேலும் மர்மமாகிவிட்டது. ''மாரி யப்பா, அந்தக் காலத்திலே நான் என் அத்தை மகளைக் கல் யாணம் செய்து கொள்ள வேண்டுமென்று எத்தனையோ ஆசையாக இருந்தேன். ஆயுள் தண்டனை பெற்று ஜெயிலுக்குள் நுழைந்ததும் அந்த ஆசையில் மண் விழுந்துவிட்டது. என் சிற்றப்பன் தன் மகன் ராமசா மிக்கே அந்தப் பெண்ணைக் கல் யாணம் செய்து வைத்துவிட் டான் என்பதை வெளியே போனபிறதான் தெரிந்துகொண் டேன். இதிலேயும் அவனுக்கு வெற்றி கிடைத்திருக்கிறது.''

''அந்தப் பெண்ணின் மகனு அந்தப் பையன்?''

''ஆமாம், அவள் பெற்ற மகன்தான். என் சொந்த ஊரில் நான் இருந்த சில நாட் களில் என் வீட்டுக்கு அவன் அடிக்கடி ஓடி வருவான். அவனைத் தவிர மற்றவர்களை நான் பார்க்கவில்லை. சிற்றப் பனுக்கும் ராமசாமிக்கும் என்னைப் பார்க்கவே அவமானமாக இருந்திருக்க வேண்டும். அதனுல் அவர்கள் எனக்கு முன்னுல் தலை காட்டவே இல்லை. என் அத்தை மகளைப் பார்க்கக்கூடாது என்று நானே தீர்மானம் செய்து கொண்டிருந்தேன்.''

''சரி, அப்புறம் என்ன நடந் தது?''

''நான் ஜெயிலை விட்டுப் போகும்போது என் அத்தை மகளை ராமசாமியே கல்யாணம் செய்து கொண்டிருப்பானென்று எதிர்பார்க்கவில்லை. அது நிலை மையைப் பெரிதும் மாற்றி விட்டது.''

''அதை விட்டுத் தள்ளப்பா. கல்யாணம் மட்டும் பண்ணிக் கொள்ளாதே என்று உனக்கு நான் சொல்லியனுப்பி னேனே!''

''அந்தப் பெண் எனக்குக் கிடைப்பாள் என்று நான் எதிர் பார்த்துச் சொல்லவில்லை. பதி னைந்து வருஷங்கள் அவளுக்குக் கல்யாணம் செய்யாமலா இருப் பார்கள்? ஆனுல் அவளை இப் படித் தினமும் பக்கத்து வீட்டி லேயே பார்த்துக்கொண்டிருக்க நேரும் என்று நான் நினைத்த தில்லை. இந்த நிலையில் எனக்கு எங்கள் ஊரில் இருக்க எப்படிப் பிடிக்கும்?''

''அதற்காக ஜெயிலுக்கு வர வேண்டுமா?''

''இன்னெரு முக்கியமான விஷயம் எனக்கு ஊருக்குப் போனபிறகுதான் தெரிந்தது. பதினைந்து வருஷங்களாகப் பிறர் ஏவலின்படி யந்திரம் போல வேலை செய்த எனக்கு அங்கே சொந்தமாக எந்தக் காரியமும் செய்ய முடியவில்லை. பண்ணைக் காரியங்களைக் கவனிக்கும்படி தூண்டுகிற மேல் அதிகாரியும் இல்லை; உள்ளுக்குள்ளே தூண்டு

தலும் இல்லை. யாருக்காவாவது வாழ்ந்தாலாவது அந்தத்தூண்டு தல் வரும். அதுவும் இல்லாது போயிற்று. அதனால் பிறர் ஏவ லின்படி வேலை செய்து காலத் தைக் கழிப்பதற்கு எனக்கு ஜெ யில்தான் சரியான இடம் என்று வந்துவிட்டேன்.''

''சரி, சரி, புரிந்தது; அந்தக் குட்டி பக்கத்து வீட்டிலே இருக் கும்போது உனக்கு அங்கே வாழப் பிடிக்கவில்லை. இது புரி கிறது. உன் சொத்தை அந்தப் பயலுக்கு ஏதுக்கு எழுதி வைக்க வேண்டும்?''

''விதியின் விளையாட்டைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்பது என் ஆசை. முதல் தடவை கொலைக் குற்றத்தை என்மேல் சுமத்தியும் என் சிற்றப்பனுக்கு என் சொத்துக் கிடைக்கவில்லை! அதை நானே சேரும்படி இப் போது செய்துவிட்டேன்.''

''என்ன? அப்போது முதல் தடவை நீ கொலை செய்யவில் லையா?'' என்று மாரியப்பன் திடுக்கிட்டுக் கேட்டான்.

''நான் அந்தமாதிரி ஒரு குற் றத்தைக் கனவில்கூட நினைக்க மாட்டேன். யாரோ செய்த கொலையை என்மேல்சுமத்தினர், என் தாய், தந்தையர் முன்ன மேயே இறந்துபோய் விட்டார் கள். நான் ஒன்றியாக இருந் தேன். சிற்றப்பனுக்கு என் சொத்தை அபகரிக்கவும், அத்தை மகளைத் தன் மகனுக்குக் கல்யாணம் செய்யவும் இது நல்ல உபாயமாகப் பட்டது. பணத்தை வாரி இறைத்துச்

சன்மார்க்கக் கட்டளைகள்

1. கடவுள் ஒருவரே.
2. அவர் அருட்பெருஞ் சோதியர்.
3. சிறு தெய்வ வழிபாடு கூடாது.
4. அத்தெய்வங்களின் பேரால் உயிர்ப்பலி வீணடம்பரம் கூடாது.
5. புலால் உண்ணக்கூடாது.
6. சாதி, சமயம் முதலிய எவ்வித வேறுபாடும் கூடாது.
7. பசிதவிர்த்தலாகிய சீவகாருண்ய வொழுக்கமே பேரின்ப வீட்டின் திறவுகோல்.
8. எவ்வுயிரையும் தம்முயிர் போல் எண்ணவேண்டும்.
9. ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமையைக் கைக்கொள்ள வேண்டும்.
10. எதிலும் பொது நோக்கம் வேண்டும்.
11. புராணம், சாத்திரம் முதலியவை முடிவான உண்மை யைத் தெரிவிக்கமாட்டா.
12. இறந்தவரைப் புதைத்தல் வேண்டும். எரித்தல் கூடாது.
13. கருமாதி, திதி முதலிய பொருளற்ற சடங்குகள் செய்ய வேண்டா.

—ந. இரா. ஊரன்.

சாட்சிகளையெல்லாம் நன்ருகத் தயார் செய்து நீதி மன்றத்தை ஏமாற்றிவிட்டான்.''

''ஜெயிலுக்கு மறுபடியும் வரத்தான் தீர்மானம் செய்தாயே, உன் சிற்றப்பனையாவது மிரட்டி அடித்துவிட்டு வரக் கூடாதா?''

''மாரியப்பா, யாருக்கும் துன்பம் உண்டாக்க வேண்டும் என்று எனக்கு இப்போது ஆசை இல்லை. என் சிற்றப்பன்மேல் கூட எனக்கு இப்போது கோபம் கிடையாது. ராமசாமிக்குக் கல்யாணம் ஆகி என் அத்தை மகள் வீட்டிற்கு வந்ததும் என் சிற்றப்பனேடு ஒரே குடும்பமாக இருக்க மறுத்துவிட்டாளாம். அவன் தனியாக வாழ்ந்து சிரமப்பட்டாளும். அவனுக்கு வீட்டிலேயே தண்டனை கிடைத்து விட்டது. அதைக்கூட நான் விரும்பவில்லை. என் அத்தை மகள் எனக்காகப் பரிவு காட்டித் தானே அப்படி அவனை ஒதுக்கி வைத்திருக்கிருள்? நான் அவள் குழந்தையையே கொல்ல முயன்றதாக அவளை நம்பும்படி செய்து விட்டால் பிறகு என்னை அவள் வெறுக்கத் தொடங்குவாள். அவள் குடும்பம் ஒற்றுமையாக வாழும். அதைத்தான் நான் விரும்பினேன்.''

இதைக் கேட்கக் கேட்க மாரியப்பன் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக வழியத் தொடங்கியது. கசப்பேறி இறுகிப்போன அவன் உள்ளமும் கரைந்துவிட்டது. ''நல்லவர்களுக்கு உலகம் இப்படித்தான் பலன் கொடுக்கும்'' என்ற வார்த்தைகள் அவன் வாயிலிருந்து கிளம்பின.

''உலகத்தின் மேலே குற்றம் இல்லை, மாரியப்பா. இதுதான் விதி என்று எனக்குத் தெரிந்துவிட்டது. நான் சிறுவயசிலே கம்ப ராமாயணம் கேட்டிருக்கிறேன். ராமர் தாம் காட்டுக்குப் போக நேரிட்டதைப்பற்றி லட்சுமணனிடம் சொன்ஞரே, அதுதான் உண்மை. ராமர் காட்டுக்குப் போக நேர்ந்தது தாயின் பிழையும் அல்ல, தந்தையின் பிழையும் அல்ல, விதியின் பிழை என்று அவர் கூறினரே; அந்த வார்த்தைதான் எனக்கு அமைதி கொடுக்கிறது'' என்ருன் முத்துசாமி.

அவர்களுடைய பேச்சுக்குத் தடங்கலாக ஒரு சம்பவம் இந்தச் சமயத்தில் நிகழ்ந்தது. யாரோ ஒருவன்; விலங்கைப் பூட்டி அவனை உள்ளே தள்ளிக்கொண்டு வந்தார்கள். அவன் வெறி பிடித்தவன்போல் காணப்பட்டான். முத்துசாமியைக் கண்டதும், ''முத்துசாமி, உன்னுடைய சிற்றப்பனைப் போய்ப் பார்'' என்று சொல்லிவிட்டு உரக்கச் சிரித்தான்.

விஷயம் என்னவென்று விசாரித்ததில் அவன்தான் முத்துசாமி கொலை செய்ததை நேரில் பார்த்ததாகக் கூறிய சாட்சி என்றும், அவனுக்கு முத்துசாமியின் சிற்றப்பன் கொடுப்பதாகக் கூறியிருந்த இரண்டு ஏக்கர் நிலத்தை அவனுக்குக் கொடுக்காமல் இத்தனை வருஷங்களாக ஏமாற்றி வந்ததால் மனம் உடைந்து போய் வெறிகொண்டு சிற்றப்பனையும் அவன் மகன் ராமசாமியையும் கொலை செய்துவிட்டானென்றும் தெரியவந்தது.

இதை அறிந்ததும் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்த மாரியப்பன் உண்மையான மகிழ்ச்சியோடு சிரித்தான். முத்துசாமி துயரத்தில் மூழ்கிக் கண்ணீர் வடித்தான்.

திருச்சிற்றம்பலம்

பாடற் கினிய வாக்களிக்கும்
பாலுஞ் சோறும் பரிந்தளிக்கும்
கூடற் கினிய அடியவர் தங்
கூட்ட மளிக்கும் குணமளிக்கும்
ஆடற் கினிய நெஞ்சேநீ
அஞ்சே லென்மேல் ஆணைகண்டாய்
தேடற் கினிய சீரளிக்குஞ்
சிவாய நமஎன் றிடும் நீறே.

—திருவருட்பா

அன்னை என்பவள் அன்பே வடிவமானவள். இறைவனும் அப்படித்தான். ஈன்றவள் இறைவனுக்கு நிகரானவள்.

ஈன்றவளை வழிபட்டால் இறைவன் மகிழ்வான்

ஒருவன் ஆயிரம் கோயில்கள், பதினாயிரம் பள்ளிக்கூடங்கள், நூறாயிரம் அன்ன சத்திரங்கள் இத்தனையும் கட்டி முடித்து நடத்தி வந்தாலும், ஈன்ற அன்னையின் மனம் நோக அவன் நடந்து கொள்ளுவானாயின், அவன் செய்யும் தான தருமங்கள் அத்தனையும் வீணாகிவிடும்.

காரணம், அன்னை என்பவள் அன்பே வடிவமானவள். இறைவனும் அன்பே வடிவமானவன். அந்த முறையில் ஈன்றெடுத்த தாயார் இறைவனுக்கு நிகரானவள். நாம் அவள் உள்ளத்தைப் புண்படுத்தினால், இறைவன் உள்ளம் புண்படும். இறைவன் உள்ளத்தைப் புண்படுத்திவிட்டு நாம் எத்தனை தான் செபதபங்கள் செய்தாலும் அவை பலன் அளிக்க மாட்டா அல்லவா? ஆகவே, நாம் செய்யும் பூசைகளும் புண்ணியங்களும் நமக்கு நற்பயனைத் தரவேண்டுமானால், நம் அன்னையின் மனம் கோணாமல் அவளை நாம் மகிழ்வோடு வைத்திருக்க வேண்டும். அப்போதுதான் இறைவனும் அவற்றை மகிழ்வோடு ஏற்றுக் கொள்வான்.

கொடிய வேங்கைப் புலிகூட, தன் குட்டியினிடத்தில் பாசத்தோடு நடந்து கொள்கிறது. அந்தக் குட்டிக்காகத் தன் உயிரையே தியாகம் செய்கிறது. இதுவே தாய்மையின் இயல்பு. இதுதான் அவளுக்குத் தெய்வத் தன்மையை அளிப்பது.

தாயும் ஒரே மானிடப் பெண் தான். அந்த முறையில் அவள் ஒரு கோபக்காரியாய் இருக்கலாம்; கொடுமைக்காரியாய் இருக்கலாம்; பொல்லாதவளாய் இருக்கலாம்; பொறாமைக்காரியாய் இருக்கலாம். ஆனால் அதற்காக, மகன் அவளை இழிவாய் எண்ணக் கூடாது. அவனுக்கு அவளே தெய்வம். ஏனெனில், அவனைப் பொறுத்தமட்டில், அவள் உள்ளம் அன்பையும் கருணையையும் தவிர வேறு எதையுமே அறியாதே! அவன் ஆயிரம் பிழைகள் செய்தாலும், அவனை அவள் மனமார வெறுக்க மாட்டாளே!

நூறு ரூபாய் நோட்டும் ஒரு காகிதம்தான். ஆனால் மற்றக் காகிதங்களுக்கும் அதற்கும் எத்தனை வேறுபாடு! அதை ஒரு காகிதம் என்ற நோக்குடனேயா நாம் பார்க்கிறோம்? அதேபோல் நம் தாயையும் ஒரு மானிடப் பெண் என்ற நோக்குடன் நாம் பார்க்கலாகாது. அவளை இறைவன் வடிவமாகவே பார்க்க வேண்டும். அப்படிப் பார்ப்பவன், தனியாக இறை வழிபாடு என ஒன்று இயற்ற வேண்டுவது இல்லை.

இந்தியாவின் சிறப்புக்கள்

1 அதிக ஜனத்தொகை கொண்ட ராஜ்யம்: உத்தரப் பிரதேசம்.

2 அதிகமான மழை பெய்யுமிடம்: சிரபுஞ்சி (அஸ்ஸாம்)

3 பெரிய ராஜ்யம்: மத்தியப் பிரதேசம்.

4 பெரிய நகரம்: கல்கத்தா.

5 பெரிய ஏரி: ஊலர் ஏரி (காஷ்மீர்)

6 பெரிய குகைக் கோயில் உள்ள இடம்: எல்லோரா (மகாராஷ்டிரம்)

7 பெரிய பொருட்காட்சிசாலை உள்ள இடம்: இந்தியா மியூஸியம் (கல்கத்தா)

8 பெரிய மிருகக்காட்சிசாலை உள்ள இடம்: அலிபூர் மிருகக்காட்சிசாலை (மேற்கு வங்காளம்)

9 பெரிய மசூதி உள்ள இடம்: ஜும்மா மசூதி (டில்லி)

10 நீளமான தொங்கு பாலம்: ஹௌரா பாலம் (கல்கத்தா)

11 நீளமான கால்வாய்: சாரதா கால்வாய் (உத்தரப் பிரதேசம்)

12 நீளமான நதிப் பாலம்: சோன் நதிப் பாலம் (கங்கையின் உபநதி)

13 அழகிய கட்டடக் கலை சிறந்த இடம்: தாஜ்மகால் (டில்லி)

14 உயரமான நீர்வீழ்ச்சி: ஜெர்சோப்பா நீர்வீழ்ச்சி (960 அடி மைசூர்)

15 உயரமான கோயில்: குதுப்மினார் (டில்லி)

16 உயரமான ஆசாரவாசல்: புலாண்டதர்வாஸா (பாதபூர்சிகரி)

17 மிக உயரமான சிலை: கோமேதசுவரர் சிலை (56 அடி மைசூர்)

18 மிகப் பெரிய மண்டபம்: கோல்கும்பாஸ் (பீஜப்பூர்)

19 மிக நீளமான ரயில் பாதை: கிராண்ட் ட்ரங்கு ரயில் பாதை (1500 மைல்கள்)

20 மிக நீளமான ரயில்வே பிளாட்பாரம்: சோனேபூர் ரயில் நிலையம் (உத்தரப்பிரதேசம்)

நாகஸ்வர இசைவாணர்கள்

பாபநாசம் சிவன்

குடகு, குணகடல், குமரி வேங்கடம் என்ற நான்கு எல்லை கொண்ட தமிழ் நாட்டிலும், கேரள நாட்டிலும் உள்ள ஆலயங்கள் அளவற்றவை. ஆலயங்களில் எழுந்தருளி உள்ள தெய்வங்களுக்கு ஆறு கால பூஜை அபிஷேக காலங்களிலும், திருவிழாக் காலங்களில் வீதியுலாவிலும், ஒவ்வொரு தென்னாட்டு வீட்டுக் கல்யாணங்களிலும் மிகவும் இன்றியமையாது முழங்கும் மங்கள வாத்தியம் நாகஸ்வர மேளம். யாதொரு ஆடம்பரமும் விளம்பரமுமின்றித் தோன்று தொட்டு இன்றளவும் நமது கர்நாடக சங்கீதத்தை இந்த நாகஸ்வர வித்வான்களே போஷித்துக் காத்து வருகிறார்களென்று உறுதியாகக் கூறலாம்.

முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் இருந்த அந்த வாத்திய வித்வான்களுள் கூறை நாட்டு நடேசன் என்பவர் சங்கீத லட்சணத்திற்கே ஓர் ஆதர்ச புருஷராவார். அந்த நாளில் எல்லா நாகஸ்வர வித்வான்களும் அவரை அந்த வாத்யத்துக்கே தந்தை என்று போற்றிவந்தனர். திருமருகல் நடேசன் உள்பட அனைவரும் அவரைப் பெரியவராகவும் குருவாகவும் போற்றி மதித்தார்கள்.

1912-ல் திருக்கடையூர்க் கார்த்திகைச் சோமவாரத்தன்று கூறைநாட்டு நடேசன் அவர்கள் வாசித்த நாட்டை ராகமும், மல்லாரியும், ரீதி கௌளை அடதாள வர்ணமும் இன்று நினைத்தால் கூட உடல் புல்லரிக்கின்றது. வயசில் சற்றே சிறியவரான திருமருகல் நடேசன் தென்னாடெங்கும் புகழ்பெற்றவர். 1905 ஆம் ஆண்டென்று நினைவு; திருவனந்தபுரத்தில் நடந்த மாயூரம் பழைய சாமி ஐயங்கார் வீட்டுக் கல்யாண ஊர்வலத்தில் அவர் வாசித்த பைரவி ராகச் சிறப்பையும் வர்ணிக்க அப்பொழுது சிறுவனாயிருந்த என் அறிவுக்குத் திறனில்லை. பூர்ணப் பிரவாகமாய் வரும் அகண்ட காவேரி வெள்ளத்தை அந்த வாத்தியத்துக்கு உவமை சொல்லலாம், செவிபடைத்த மக்களெல்லாம் தன் நினைவு இழந்து இரவு முழுவதும் அந்த ஊர்வலம் சென்ற வீதிகளிலும் சாலைகளிலும் நான்கு மைல் தூரம் கேட்டுக்கொண்டே

மங்கள வாத்தியம் நாகஸ்வரம். நமது கர்நாடக இசையைத் தொன்றுதொட்டு இன்றுவரை நாகஸ்வர இசைவாணர்களே பாதுகாத்து வருகிறார்கள்.

நடந்தார்கள். அவ்வூரிலிருந்து சமஸ்தான மஹா வித்வான் களும் இதற்கு விதிவிலக்கல்ல.

அடுத்தபடியாக மன்னார்குடி சின்னப்பக்கிரி எந்த ராகத்தை வாசித்தாலும் அவர் கையாளும் வக்ர சஞ்சாரங்களும் துரிதகால சஞ்சாரமும் அலுப்புத் தட்டா மல் தனிச் சிறப்பாக இருக்கும்.

சின்னப் பக்கிரி மேளமும் கோனேரி ராஜபுரம் வைத்திய நாதய்யர் பாட்டும் ஒரே ரக மென்று அந்த நாளில் பிரசித்தி. இதனால் வைத்திய நாதய்யர் பாட்டை ''மேளக்காரப் பாணி'' என்றுகூடச் சொல்லுவார்கள். இவ்விருவரும் உற்ற நண்பர்கள். கற்பனைத் திறனில் ஒருவரை யொருவர் மிஞ்சினவர்கள். 1911 இல் மாசிமகத் திருவிழாவில் திருச்செந்தூரில் பத்து நாட் களும் வாசிக்க வந்திருந்தார் முருகபக்தரான சின்னப்பக்கிரி.

அடுத்த ஆண்டு ராஜமன்னார் குடி ஸ்ரீ ராஜ கோபால் சுவாமி பங்குனி மகோற்சவத்தில் கோட் டூர் கோபாலசுவாமி முதலியாரு டன் சின்னப் பக்கிரியவர்களின் கீரவாணி ராகத்தைக்கேட்டு உலகை மறந்தேன். அகந்தை, படாடோபம் முதலிய எவ்விதத் துர்க்குணமும் அவரிடம் கிடை யாது. உயர் நற்குணங்களுக் கெல்லாம் பிறப்பிடம் அவர் எனலாம்.

கும்பகோணம் சிவக்கொழுந்து என்ற பிரபல நாகஸ்வர வித் வான் பெரிய யோக்கியதை யுள்ளவர். இசை வேளாளர் குலத்தவருக்கெல்லாம் அவரிடம் பெரும் மதிப்பு உண்டு. அவர் வீட்டில். 1907 ஆம் வருஷம் என்று நினைவு—நடந்த ஒரு திரு மணத்தில் எல்லா நாகஸ்வர வித்வான்களும் வந்திருந்தார் கள். அன்றிரவு வாசித்த சின் னப் பக்கிரியின் சங்கராபரண ராகத்தை அவர்கள் கேட்டதும், இதைப்போல் முன்பின் கேட்ட தில்லை யென்று வியந்து அன் றைய தினம் தங்கள் நாகஸ்வர வாத்தியத்தைக் கையால் தொடவே விரும்பவில்லையாம்!

இவரது சம காலத்தவர்களான செம்பனார் கோவில் ராமஸ்வாமி யும், மதுரை பொன்னுசாமி பிள்ளையும் ஒவ்வொரு வகையில் மகா தீரர்கள். எந்த ராகத்தை வாசித்தாலும், தொட்ட இட மெல்லாம் ராக ஜீவன் மின்னும் படி வாசிப்பதில் செம்பனார் கோவில் ராமசாமி ஒப்புயர்வற்ற வர். ரூபகம், ஜம்பை, சாப்பு தாளங்களில் பல்லவி வாசிப்ப தில் இவருக்கு வெகு பிரியம். சிறுசிறு பல்லவி ஒரு களையில் வாசித்து, ராகமாலிகையாய்ப் பல்லவியை முடிப்பதில் என்ன அற்புதக் கற்பனையும்பிருக்காவும் இருக்குமென்பதை அனுபவித்த எனக்கு எழுதத் தெரியவில்லை.

சாவேரி, நாட்டக் குறிஞ்சி, கானடா ராகங்களை அவரிடம் கேட்டதை மறக்கும்படிஇன்னும் வேறு யாரிடமும் கேட்கவில்லை. மதுரை பொன்னுசாமிபிள்ளை உயர்ந்த லக்ஷண வித்வான். மேளங்களையும் சுருதியையும் தீர ஆராய்ந்து இசை இலக்கண நூல்கள் பல எழுதியவர் மட்டு மல்ல; எதையும் தம் நாகஸ்வர வாசிப்பில் சாதித்துக் காட்டும் திறமையுள்ளவர். ஸ்வர ஸ்தா னந்தோறும் படிப்படியாய்ராகங் களை அவர் வாசிக்கும் பொழுதும் மந்த்ர ஸ்தாயியில் சஞ்சரிக்கும் பொழுதும் அலை ஓய்ந்த கடல் போலச் சுருதி லயம் மனோகரமா யிருக்கும். 1913 ல் நாகை ஆடிக் கிருத்திகை யன்று அவ்வூர் மாரியம்மன் கோயில் வீதியுலா வில் அவர் வாசித்த ஆனந்த பைரவி ராகத்தைக் கேட்டு அசந்து போனேன்!

சிதம்பாம் வைத்தியநாதன் அவர்கள் தனி ரகம். ஆள் கண்ட சமுத்திரம் என்பார்களே அவ் விதம் ரசிக்கும் கூட்டத்தைக் கண்டால் கடல் மடை திறந்தாற் போன்ற வாசிப்பு. ராகம் பல் லவிகளில் தேட்டையான நிர்ணய ஞானம். வாய்ப்பாட்டுக் கச்சேரி செய்வதிலும் பிரசித்தர். சேத் தூர் ஜமீன்தாரின் ஆதீனத்தில் தேவதானமென்ற சிவாலய மகோற்சவத்தில் பழனி மிருதங் கம் சுப்பிரமணியபிள்ளையின் தந் தையான பழனி முத்தையா பிள்ளையின் தவிலுடன் அவர் வாசித்தார். சில வருஷ காலம் சிதம்பரம் திருவிழாவில் கைங் கர்யம் செய்யாமல் ஒதுங்கியிருந் தார். தன் உலக யாத்திரை முடிந்துவிட்டதை உணர்ந்த வர்போல இறப்பதற்கு முதல் வருஷம் நடராஜப் பெருமான் திருவிழாவில் பத்து நாட்களும் தமது இனிய நாகஸ்வர இசை அமுதத்தை அப்பெருமானுக்குத் தாமாகவே அர்ப்பணம் செய் தார். அவ்வாண்டு சிதம்பரம் எம்பார் ஸ்ரீரங்காச்சாரியார் என்ற என் குருநாதருடன் (எம் பார் விஜயராகவாச்சாரியாரின் தந்தை) அந்தக் கச்சேரிகளைக் கேட்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

ஒரு நாள் கமாஸ் ராகமும் அதில் 'சீதாபதே' கீர்த்தனமும் அதற்கு ஸ்வரமும் மற்றொரு நாள் ஹுசேன் ராகமும் கேட்டு மூன்று மணி நேரம் பரவசம் அடைந்தேன்.

மின்னல் வெட்டுப்போல அபரி மிதமாய் நாகஸ்வரம் வாசிக்க ஆரம்பித்த வேகத்திலேயே, திரு விடைமருதூர் சிவக்கொழுந்து அகாலமரணமடைந்து விட்டார்.

இதுவரையில் அடுக்கி வந்த நாகஸ்வர வித்வான்களிடம் எந்த அம்சங்களெல்லாம் சிறந்த வையோ அவை யெல்லாம் ஒருங்கே நிறைந்து திராக்ஷ பாகம் என்று சொல்லும்படி அற்புத ரசம் செறிந்தது, திருவாடு துறை டி. என். ராஜரத்தினம் பிள்ளையின் தேவகானம். அவ ரைப் போல் சுருதியோடு லயித்து வாசித்தவர்கள் இரண்டொரு வரே இருக்கலாம். '' 'கமலப் பத மலரினை' என்பதைப்போல் ஹரிகாம்போதியில் ஒரு ரசமான கற்பனையை வேறு எதிலும் நான் காணவில்லை''யென்று சொன்ன உத்தம ரசிகனை நான் இழந் தேன். அவர் ஆன்மா சாந்தி அடைக!

[கல்கி'யில் இருந்து எடுத்தது.]

கொடுத்த வாக்கைக் காப்பாற்றத் தவறியவனை உலகம் மதிக்காது

கொடுத்த வாக்கைக் காப்பாற்ற வேண்டாமா?

நாம் யாருக்கேனும் ஒரு வாக்குறுதியைக் கொடுத்துவிட்டால், அதை எப்படியும் காப்பாற்றித் தீர வேண்டியது நம் கடமையாகும்.

கொடுத்த வாக்கைக் காப்பாற்றத் தவறிய ஒருவனை, உலகம் மதிக்காது, அவனைக் கடவுளும் காப்பாற்ற மாட்டார்.

பறவைகளுக்கோ விலங்குகளுக்கோ இல்லாத ஒரு தனிப்பட்ட திறமையை, இறைவன் மனிதனுக்கு வழங்கியிருக்கிறார். அதுதான் பேச்சுத் திறமை.

கடவுள் கொடுத்த அந்தத் திறமையை, மனிதன் பயபக்தியோடு பயன்படுத்த வேண்டும். அப்படிக்கு இன்றி, பிறரை நம்பிக்கை மோசம் செய்வதற்காக அவன் அந்த நல் ஆற்றலை உபயோகிப்பானாயின், இகத்திலும் பரத்திலும் அவன் படுதோல்விக்கு ஆளாவான்.

நம்முடைய சக்திக்கு மீறின வாக்குறுதிகளை, நாம் யாருக்கும் கொடுக்கக் கூடாது. அப்படிக் கொடுத்துவிட்டால், எத்தகைய தியாகத்தைச் செய்தேனும் அதை நிறைவேற்றியாக வேண்டும்.

நிறைவேற்றாத வாக்குறுதியானது, நம்முடைய முன்னேற்றப் பாதையில் ஒரு முள்வேலியைப் போல, குறுக்கே வழியடைத்து நிற்கும். ஒரு வாக்குறுதியை நாம் நிறைவேற்றாவிட்டால் எதிரிக்கு எவ்வளவு எவ்வளவு ஏமாற்றம் ஏற்படுமோ, அதைப் போல இரு மடங்கு ஏமாற்றம் வேறொரு வகையில் நமக்கு ஏற்பட்டுவிடும்!

இன்ன இன்ன புண்ணியங்களைச் செய்தால், இன்ன இன்ன செபதபங்களைச் செய்தால், இன்ன இன்ன முறையில் இறை வழிபாடு இயற்றினால், அதற்கு இன்ன இன்ன பலன் கிட்டும் என்று சாத்திரங்களில் கூறப்பட்டுள்ளது. கொடுத்த வாக்கைக் காப்பாற்றாதவனுக்கு, அவன் என்னதான் பூசைகளையும் புண்ணியங்களையும் செய்தாலும், அவற்றிற்குச் சாத்திரங்களில் வாக்களிக்கப்பட்டுள்ள பலன், ஒருநாளும் கிடைக்க மாட்டாது.

வாழ்க்கையில் நம்மை யாரேனும் நம்பிக்கை மோசம் செய்வார்களாயின், நாம் யாரையோ எப்போதோ மோசம் செய்திருக்கிறோம் என்று உணர்ந்துகொள்வதே, அறிவுடையோரின் செயலாகும்.

திருச்சிற்றம்பலம்

சங்குடையான் தாமரையான்
தாள்முடியுங் காண்பரிதாங்
கொங்குடைய கொன்றைக்
குளிர்சடையாய் கோதை ஒரு
பங்குடையாய் ஏழை முகம்
பாராது தள்ளிவிட்டால்
எங்கடைவேன் ஐயா
எழுத்தறியும் பெருமானே


—திருவருட்பா

கிராமங்களில் இப்பொழுதெல்லாம் புது வேகமும் உற்சாகமும் உண்டாகி இருக்கின்றன. கிராம நலன்களைக் கிராமிய மக்களே செய்து கொள்கிறார்கள்.

ஒவ்வொரு வருஷமும் நாம் பல பண்டிகைகளைக் கொண்டாடி வருகிறோம். அவற்றைக் கொண்டாடுவதில் நமக்குச் சலிப்பு ஏற்படுவதே இல்லை. அதற்குப் பதிலாக, அவை எப்போது வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருப்போம். முக்கியமாக, தீபாவளியை ஆண்கள், பெண்கள், குழந்தைகள் முதலிய எல்லாரும் பல நாட்களாகவே எதிர்பார்த்து, அந்த நன்னாளை எதிர் கொண்டழைக்க, புதுப் புது வகையாகத் திட்டம் இட்டுக் கொண்டிருப்பார்கள்.

நாம் எல்லாரும் வாழப் பிறந்தவர்கள். சந்தோஷமாக வாழும் வகையை நம் பண்பாடு அடிக்கடி நினைவூட்டுகிறது. நம் நாட்டுப் பண்டிகைகள், அந்தப் பண்பாட்டின் அடிப்படையில் தோன்றி, இன்றும் சமுதாயத்தில் நடைமுறையில் இருந்து வருகின்றன. ஒரு குடும்பத்தில் அல்லது ஒரு வீட்டில் மட்டும் சந்தோஷம் தாண்டவமாடினால், போதாது. ஊரெங்கும், நாடெங்கும் மக்கள் மனமகிழ்ச்சியோடு வாழ வேண்டும் என்பதையே, தீபாவளிப் பண்டிகை வற்புறுத்துகிறது.

கடந்த சில வருஷங்களாக, நம் நாட்டில் ஒரு புதிய விழிப்பு ஏற்பட்டுள்ளது. கிராமாந்தரங்களில் வாழும் ஜனங்களிடையே புத்துணர்ச்சியும் புதிய சிந்தனையும் உருவாகி வளம் பெற்று வருகின்றன. அவற்றின் விளைவாக, சோம்பிக் கிடந்த மக்கள் சுறுசுறுப்போடு பொதுநல வேலைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். அரசாங்கத்துக்கு மனுப் போட்டுவிட்டு, 'ஒன்றும் நடைபெறவில்லையே!' என்று குறை கூறிக் கொண்டிருந்த கிராம ஜனங்கள், தாங்களே முன்வந்து தங்கள் பொதுக் காரியங்களை நிறைவேற்றிக் கொள்கிறார்கள். கிராம சமுதாயத்தில் சில முக்கிய மாறு



கிராமங்களில் புத்தொளி

எம். பக்தவத்ஸலம்

தல்கள் ஏற்பட்டு வருவதைக் கண்கூடாகப் பார்க்கலாம்.

அது மட்டும் அல்ல, உயர்நிலைப் பள்ளிக்கூடத்தில் வாசிக்கும் மாணவர்கள், கல்லூரிகளிலே படிக்கும் இளைஞர் ஆகியோர், விடுமுறை நாட்களில் கிராமங்களிலே தங்கியிருந்து, கிராம ஜனங்களுக்குப் பயனுள்ள காரியங்களைச் செய்கிறார்கள். ஒரு நாள், இரண்டு நாள் மட்டும் அல்ல. இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்கு மேலாக, கிராமங்களிலேயே தங்கியிருந்து, ரஸ்தா போடுதல், ஏரி மராமத்துச் செய்தல், வைத்திய உதவி புரிதல் முதலான தொண்டுகளைச் செய்கிறார்கள். இவையெல்லாம், நம் சமுதாயத்தில் ஏற்பட்டு வரும் நல்ல மாறுதல்கள். 'உழைப்பது கேவலம், படித்தவர்களுக்கு ஏற்றது அல்ல. உழைக்காமலே வாழ்வதுதான் கல்வி' என்ற தவறான பழங்கொள்கைகள், தவிடு பொடியாகி வருகின்றன.

ஒவ்வொரு வருஷமும், கிராம நல வேலைகளில் புதிய வேகமும் உற்சாகமும் உண்டாகி வருவதை நான் கண்டு வருகிறேன். சென்ற ஆண்டு காந்தி ஜெயந்தி களில் தேசிய வளர்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. பேச்சளவில் அன்று ஆரம்ப விழா நடந்ததே தவிர, வேலைகள் தொடங்குவதற்கு, அதற்கு மேல் மூன்று அல்லது நான்கு மாதங்களாயின. ஆனால், இவ்வருஷமோ, புதிய திட்டம் ஆரம்பமான அதே தினத்தில் அநேக வேலைகளும் தொடங்கப்பட்டுவிட்டன. சென்னைக்கு அடுத்த ஸ்ரீபெரும்பூதூர், மாதிரி மங்கலம், மணமங்கலம் முதலிய ஊர்களில், அக்டோபர் மாதம் முதல் தேதி சுமார் இருபதுக்கு மேற்பட்ட வேலைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன, குடிநீர் வசதி, உயர்நிலைப் பள்ளிக் கட்டடம், பூங்கா, ரேடியோ நிலயம், ரஸ்தா முதலிய பல வேலைகள் தொடங்குவதில், பெருந் திரளான மக்கள் உற்சாகத்தோடு கலந்து கொண்டார்கள். ஏழைகளாயுள்ள சேரிவாழ் மக்களும் இதில் ஆனந்தத்தோடு பங்கெடுத்துக் கொண்டது மிகவும் முக்கியமான செய்தியாகும். ஜில்லா கலெக்டர், எஞ்சினியர்கள், மற்ற அதிகாரிகள் ஆகிய அனைவரும் கிராம வேலைகளில் விசேஷக் கவனம் செலுத்தி வருகிறார்கள். அபிவிருத்தி வேலைகளைப் பற்றிய காட்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டன.

இவையெல்லாம், நம் சமுதாயத்தில் உருவாகி வரும் புதிய மனோபாவத்துக்கும் கிராமாந்தரங்களில் நடைபெற்று வரும் முன்னேற்ற வேலைகளுக்கும் சிறந்த உதாரணங்கள்.

தீபாவளித் திருநாளன்று, இவற்றை நினைவு கொள்வோமாக! எல்லாருடைய வாழ்விலும் புத்தொளி பரவப் பிரார்த்திப்போம்!

பசித்திரு! தனித்திரு! விழித்திரு!

பசித்திருத்தல் என்பது பட்டினி கிடப்பதல்ல. அளவோடு உண்பது. இது ஒரு வகை. பசியில் பலவகை உண்டு. காமப்பசியும் ஒரு வகையே. இங்குக் கூறப்படும் பசி அறிவுப் பசி.

தனித்திருத்தல் உடலால் அல்ல; உள்ளத்தால். உடலால் தனித்திருந்து அதாவது கூட்டத்தை விட்டு விலகியிருந்து பழகினுல் உள்ளத்தால் தனித்திருக்கும் தன்மை வரும்.

விழித்திருத்தல் இரவோடிரவாகக் கண் விழித்தல் அல்ல. விழித்திருந்தும் குருடராவார் உண்டு. தூங்கியும் விழிப்புடையார் உண்டு. விழிக்க வேண்டியது ஞானக் கண்.

அறிவுப் பசி ஏற்பட்டு,
உள்ளத்தால் தனித்திருந்தால்
ஞானக்கண் விழிப்புக்கு ஏதுவாகும்.
பதவி கிட்டும்.

—வடலூர் கந்தசாமி சுவாமிகள்



பழைமையும் புதுமையும்

வி. ஜி. பன்னீர்தாஸ்

பழைமை என்பது ஆழ்ந்த கருத்து நிறைந்த பெரியதொரு சொல். அந்தச் சொல் இல்லாவிடில், மனித இனத்தின் கடந்த கால வரலாற்றினை நாம் அறியவே முடியாது.

கல் தோன்றி மண் தோன்றாக் காலம் என்கிறார்களே, அதற்கு முந்திய கால முதற்கொண்டு தோன்றி வளர்ந்த சமுதாயங்களின் படி முறை வளர்ச்சி, நாகரிகம், இலக்கியம், கனவு, சாதனை இவை யெல்லாம் பழைமையில் அடக்கமாயுள்ளன.

பழைமையில் எத்தனையோ பெருமைகள் பொதிந்துள்ளன. அதை யாரும் வெறுக்கக்கூடாது.

பழைமையும் புதுமையும் இணையவே முடியாதென்று இளைய தலைமுறையினர் எண்ணத் தொடங்கியுள்ளனர். பழைமையானவை அனைத்தும் அறியாமை என அவர்கள் நினைக்கின்றனர். அதே போன்று புதியவை அனைத்தும் தீங்கானவை எனப் பெரியவர்கள் பலர் எண்ணுகின்றனர்.

ஒரு பள்ளியில் ஆசிரியர் முக்கியமானவரா, மாணவர்கள் முக்கியமானவர்சுளா? என்ற வினாவைப் போன்றதுதான் இதுவும். ஆசிரியர் இல்லாமல் பள்ளி இல்லை, மாணவர் இல்லாமலும்

பள்ளி இல்லை. யாரை முக்கியம் என்பது?

பைபிள், கொரான், கீதை போன்றவை பழையவை என்று ஒதுக்கிவிட முடியுமா? அவை காட்டும் வாழ்க்கை நெறியை நாம் மறுக்க முடியுமா? அவை காலத்தால் அழியாதவை. காலத்தை வென்றவை. மனித ஆன்மாவின் மதிப்பினையும் பெருமையினையும் அவை உணர்த்துகின்றன.

இன்றையப் புதிய விஞ்ஞான வளர்ச்சியும் முன்னேற்றமும் சமுதாயத்துக்கு அளப்பரிய நன்மைகளைப் பயந்துள்ளன. அவை தன்னிலேயே கெடுதியானவையல்ல. ஆனால் பழைய மரபுகளையும் வாழ்க்கை நெறிகளையும் மறந்து விடுவதால், நாம் அழிவை நோக்கி விரைவாகச் சென்று கொண்டிருக்கிறோம்.

புற்று நோயால் வாடும் ஒரு மனித உயிரைக் காக்கத் தகுதியற்ற இன்றைய விஞ்ஞானம் அணுக்குண்டு, நீரகக் குண்டு, கோபால்ட் குண்டு போன்றவற்றால் கோடிக்கணக்கான மக்களைக் கண நேரத்தில் அழிக்கும் தகுதி பெற்றுள்ளது. இதனை எப்படிப் பாராட்ட முடியும்?

பழைமையும் புதுமையும் இணைந்ததொரு வாழ்க்கை அமைப்பினால் மட்டுமே இன்றையச் சீரழிவிலிருந்து நாம் தப்ப முடியும்.

பழைமையிலிருந்து நாம் எதனைக் கற்றுக் கொள்வது? பழைமை யென்றால் அறியாமை என்றுதானே பொருள்? இப்படிச் சிலர் கேட்கின்றனர்.

நமது முன்னோரிடமிருந்து நாம் பெற்ற அறிவுச் செல்வம்தான் இன்றைய விஞ்ஞானமாக வளர்ந்துள்ளது. அணுவை எடுத்துக் கொள்ளுங்கள். இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே அணுவைப் பிளாட்டோ அறிந்திருந்தார். நமது ஔவையாரும் அணுவைப் பற்றிக் கூறியிருக்கிறார். அவர் அறிந்தது மிகச் சிறிய அளவாக இருக்கலாம். ஆனால், டால்டன், ருதர்போர்டு, ஐன்ஸ்டீன் போன்றோரது அணுக் கோட்பாடுகள் முன்னோரது கருத்திலிருந்து உருவானவையே.

இன்று விஞ்ஞானிகள் விமானத்தையும் ஏவுகணையையும் படைக்கின்றனர். அன்று வால்மீகியும், வியாசரும், கம்பரும் விமானங்களையும் ஏவுகணைகளையும் கற்பனையில் எண்ணிப் பார்த்துள்ளனர் என்பது வியப்பாக இல்லையா?

நாம் பழைமையை வெறுத்தாலும் நம்மை அறியாமலே, அதற்கு முந்திய காலத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறோம். நமது நாகரிக மங்கையர் ஆடைக் குறைப்புச் செய்யும் வேகத்தைப் பார்த்தால் காட்டு மிராண்டிகளாக வாழ்ந்த கற்காலத்துக்குச் சென்று விடுவோமோ என்று அச்சம் ஏற்படுகிறதல்லவா?

நமது நாகரிக வாழ்வு, இறைவனிடமிருந்து விலகிச் செல்லச் செல்ல அழிவை நெருங்குகிறது என்றுதான் பொருள். இறைவனை உலகம் மெல்ல மெல்ல மறந்து வருகிறது. இதுதான் இன்றையச் சீர்கேட்டின் முதற் காரணம். இறைவன் மனச் சான்று எல்லாம் ஏதோ ஒரு சம்பிரதாயச் சடங்குகள் ஆகி விட்டது.

பழைமையான கடவுள் நெறியையும், வாழ்க்கைக் கோட்பாட்டையும் உறுதியோடுகடைப் பிடிப்போம். பழைமையை மறந்து வெறும் புதுமை என்று அலைந்தால் நமது நாகரிகம் அழிந்துதான் போகும்.

செல்வமும் துன்பத்தைத் தரலாம் வறுமையும் இன்பத்தைத் தரலாம்

செல்வம் சில சமயங்களில் மகிழ்ச்சியைத் தருவதில்லை. ஆனால் வறுமை இன்பத்தைத் தந்துவிடுவதும் உண்டு!

செல்வத்தைச் சேமித்து வைத்துக் கொண்டால், அதன் உதவியால் நாம் இன்பத்தை அடையலாம் என்பது, பொதுவான உலகியல் கொள்கை. அந்தக் கொள்கையின் அடிப்படையில் தான் மக்கள் அரும்பாடுபட்டுப் பொருள் தேட முயல்கின்றனர்.

பொருள் இல்லாதவர்களுக்கு வாழ்க்கையே துன்பமயமாகக் காட்சியளிக்கிறது. தாம் உயிர் வாழ்வதற்கே அவர்கள் பிறர் கையை எதிர்பார்த்து ஏங்க வேண்டியதிருக்கிறது அதனால் தான் ''கொடிது கொடிது வறுமை கொடிது!'' என்றி கூறினார் ஔவை மூதாட்டியார்.

ஆனால், செல்வத்தைக் குவியல் குவியலாய் வைத்திருப்பவர்களுக்குக்கூட, வாழ்க்கை ஒரு துன்பக்கேணியாய் அமைந்து விடுவதுண்டு. ஏழைகளின் வாழ்வு இன்பமாய் அமைந்து விடுவதும் உண்டு. எனினும், இந்த உண்மை பலருக்குத் தெரியாது.

வெளிப்படையாகத் தெரிகிற கார்களையும் பங்களாக்களையும் பெண்களின் கழுத்தில் அலம்பும் காசுமாலைகளையும் பார்த்துவிட்டு ஒருவர் இன்ப வாழ்வு வாழ்கிறார் என்று நாம் எண்ணிக் கொள்கிறோம். அதேபோல், ஒருவருடைய குடிசை வீட்டையும் கூழ்ப்பாண்டத்தையும் பார்த்து விட்டு, அவர் வறுமையால் வாடுகிறார் என்று நாம் முடிவுகட்டி விடுகிறோம்.

ஒருவர் தம் நெற்றியில் இட்டிருக்கும் திருநீற்றையோ திருமண்ணையோ பார்த்து விட்டு அவரை ஓர் உண்மையான பக்திமான் என்று மதிப்பிடுவது எவ்வளவு பெரிய தவறோ;

அவ்வளவு பெரிய தவறுதான், அவருடைய பணப்பையின் கனத்தைப் பார்த்துவிட்டு அவரது உள்ளத்தின் மகிழ்ச்சியை மதிப்பிடுவதும்.

விபூதியையும் உருத்திராட்சத்தையும் வெளிவேடத்திற்காகத் தரித்துக்கொண்டு, உள்ளத்தில் சிறிதேனும் சிவபக்தியில்லாமல், கொலைச் செயல் புரிந்த கொடியவர்கள் சிலரைப்பற்றி, நம் பெரிய புராணத்திலேயே கதைகள் காணப்படுகின்றன.

அதேபோல, ஒரு மாபெரும் சாம்ராஜ்யத்துக்கு அதிபதியாயிருந்தும், உள்ளத்தில் சிறிதேனும் மகிழ்ச்சியில்லாமல் வாழ்ந்து முடிந்த துரியோதனனைப்பற்றி மாபாரதம்கூறுகிறது.

மகிழ்ச்சியைத் தராத செல்வம், வெறும் பயனற்ற செல்வமே அல்லவா? அத்தகைய

செல்வத்தைப் பெற்றிருப்பதைக் காட்டிலும் பெருமல் இருப்பதே மேலானது அல்லவா?

செல்வம் எதனுல் இப்படிப் பயனற்றுப் போகிறது?

ஈயம் பூசாத பாத்திரத்தில் வைக்கப்பட்ட இனிய மோரும் நஞ்சாகி விடுவதுபோல, அறநெறியில் பற்று இல்லாதவனுடைய அருஞ்செல்வமும அவனுக்குப் பெருந் துயரத்தையே தருகிறது.

அறநெறியில் ஒழுகுபவன் எவனே, அவனுக்கு மட்டுமே செல்வம் ஆனந்தத்தை அளிக்கும். அறநெறியைப் புறக்கணிப்பவனுக்கு, அதே செல்வம் துன்பத்துக்குக் காரணமாய்க் காட்சி அளிக்கும்.

அதேபோல, ஒருவன் எவ்வளவுதான் வறியவனுயிருந்தாலும், அவன் அறத்தை மட்டும் மறக்காதவனுயிருந்தால், அந்த வறுமை அவனுக்குச் சிறுமையைத் தராது. அவனுடைய இன்ப வாழ்வுக்கு அது ஓர் இடையூருக இருக்காது. இன்னும் சொல்லப்போனுல், அந்த வறுமையே அவனுக்கு ஓர் இன்ப சாதனமாகக்கூட அமைந்து விடலாம். பன்னிரண்டு ஆண்டுகள் வனவாசம் புரிந்த பாண்டவர்களின் கதையே இதற்குச் சான்ருகும்.

எனவே, ஒரு மனிதனுடைய இன்பமும் துன்பமும் அவனது செல்வத்திலோ வறுமையிலோ இல்லவேயில்லை. அவன் கடைப்பிடிக்கும் தருமத்திலும் அதருமத்திலும்தான் அவை இருக்கின்றன.

இறைவன் கருணை காக்குமடா !

எங்கும் நிறைந்த பொருள்—நாங்கள்
ஏத்தும் இறைவன் அருள்
தங்கும் திருஅருளே—இறைவன்
தன்மை பரம்பொருளே!

(எங்கும்)

அம்மை அப்பன் அவன்—அன்பர்க்(கு)
அருளும் தன்மையவன்
நம்பி வணங்கிடுவோம்—அவனை
நாளும் நினைத்திடுவோம்

(எங்கும்)

திருவிளை யாடலிலே—உண்மை
தெரிந்து கொள்வதிலே
அறிவு கண்டிடடா—அதுதான்
ஆண்டவன் காட்சியடா

(எங்கும்)

சிவனடி யான் என்றே—சிறப்பைத்
தேடிக் கொள் இன்றே
கவலை விட்டிடடா—இறைவன்
கருணை காக்குமடா

(எங்கும்)

மதுரை மாறன்
60, முத்து இருள நாடார் வளைவு,
திருப்புவனம்,
முகவை மாவட்டம்.

வெளியிடுபவரும், ஆசிரியரும்: இராம. மணிமேகலை,
4, தணிகாசலம் செட்டி ரோடு, சென்னை-17
அச்சிடுபவர்: கொண்டா. காசி. சீதாராமன்,
ராமன்ஸ் பிரிண்டிங் பிரஸ், பாண்டிபஜார். தியாகராயநகர், சென்னை-17

ஆசிரியர்:
திருமதி தமிழ்வாணன்

அருள்

Arul
VOL-2 - 1967-68

தென்னாட்டில் சிறந்த



தெய்விகப் பத்திரிகை


தீபாவளி முதல்
சாந்தி
(டீலக்ஸ் ஏர்கண்டிஷன்ட்)
பிராட்வே
சயானி மற்றும்
தென்னாடெங்கும்.
கே.எஸ்.பிலிம்ஸ்.
ஊட்டி வரை
உறவு
ஈஸ்ட்மென்கலர்
கதை, வசனம்
டைரக்ஷன்
ஸ்ரீதர்
தயாரிப்பு
கோவை செழியன் B.A
SEMB


பாருங்கள்
மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் நடிக்கும்
தேவர் பிலிம்ஸ்
விவசாயி
கதை, தயாரிப்பு
சாண்டோ M.M.A.சின்னப்பாதேவர்
டைரக்ஷன்
M.A.திருமுகம்
இசை:
K.V.மகாதேவன்
ஸ்டார்
ஸ்ரீ கிருஷ்ண
புவனேஸ்வரி
கிருஷ்ணவேணி
மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் அளிக்கும்
சத்யா மூவீஸ்
காவல்காரன்
திரைக்கதை, தயாரிப்பு
RM.வீரப்பன்
டைரக்ஷன்
ப.நீலகண்டன்
இசை: விஸ்வநாதன்
குளோப் · அகஸ்தியா
70MM
மேகலா · நூர்ஜஹான்
செந்தில் ரிலீஸ்

திருச்சிற்றம்பலம்

கல்லார்க்கும் கற்றவர்க்கும்
களிப்பருளுங் களிப்பே
காணார்க்குங் கண்டவர்க்கும்
கண்ணளிக்குங் கண்ணே
வல்லார்க்கும் மாட்டார்க்கும்
வரமளிக்கும் வரமே
மதியார்க்கும் மதிப்பவர்க்கும்
மதி கொடுக்கும் மதியே
நல்லார்க்கும் பொல்லார்க்கும்
நடுநின்ற நடுவே
நரர்களுக்கும் சுரர்களுக்கும்
நலங் கொடுக்கும் நலமே
எல்லார்க்கும் பொதுவில் நடம்
இடுகின்ற சிவமே
என்னரசே யான்புகலும்
இசையுமணிந் தருளே

—திருவருட்பா

Arul

அருள்

தமிழ் மாத முதல்நாள் வெளிவருகிறது

இந்த இதழில்

4 எல்லா உலகும் பெறும்

8 உண்மையாக ஆசைப்பட்டால்?

9 கிராம ராஜ்யமே ராம ராஜ்யம்

12 நாரதர் தோற்றார்!

14 தப்பிதம் செய்த அற்புதம்!

16 மாணவர்களே!

18 வருவான் மயிலில் ஏறியே!

19 அருட்பெருஞ்ஜோதி ஆட்சி வரவேண்டும்

22 பிள்ளையார்

25 தாய்ப்பால் ஊட்டத் தயங்கலாமா?

28 அருள் என்னும் அமுதம்

31 வியாபார விபூதி

அருள்—2 நவம்பர்

கருணை—2 15—11—67

கார்த்திகை, பிலவங்க விலை: 25 காசு

Nov

பூதன் தம்பதியர் வரகரிசிச் சோறை
அன்புடன் ஒளவையாருக்கு இட்டனர்.
அந்த உணவு எல்லா உலகும் பெறும் என்ற
தனிப் பெருமைதனைப் பெற்றுவிட்டது!

ஒரு பொருளுக்குப் பெருமை அப்பொருளின் உயர்வாகிய தனித்தன்மையில் இல்லை. அப்பொருளைக் கொடுப்பவனுடைய அன்பின் அருமையில் உயர்வு அடங்கியுள்ளது.

நெய்யினால் தாளிதம் புரிந்து பளபளவென்று பூனைக் கண் போல் நல்ல நிறமுள்ள உயர்ந்த உணவாக இருப்பினும், அன்பில்லாதவன் மனையில் ஓர் ஒதுக்கிடத்தில் இருந்து உண்ணும் உணவு வேம்புபோல் கசக்கும்.

''விருப்பிலார் இல்லத்து
வேறிருந் துண்ணும்
வெருகுக்கண்
வெங்கருணை வேம்பாம்''
என்று கூறுகின்றது நாலடியார்.

அன்பே சிவம்

அன்பில்லாமல் தருகின்ற பொருள் எத்துணை உயர்ந்ததாயினும் அது உயர்வு பெறாது. அன்புடன் தந்த உப்பில்லாத கஞ்சி அன்பின் மிகுதியால் அமிர்தமாகத் தித்திக்கும்.

சபரி என்ற வேடர்குல நரை மூதாட்டி தந்த எச்சிற்கனி இராமருக்கு அமிர்தம்போல் இருந்தது. அன்பின் சிகரமாக விளங்கிய கண்ணப்பர் தந்த எச்சில் மாமிசத்துண்டு, சிவபிரானுக்குப் புதிய அமிர்தம் போலிருந்தது.



எல்லா உலகும் பெறும்

திருமுருக
கிருபானந்தவாரியார்

'இஞ்சித் பக்ஷித மாம்சசேஷ
கமளம் நவ்யோபஹாராயதே'
இவைகளுக்கெல்லாம் காரணம் எது? அன்புதான்!

ஔவையார்

ஔவையார் ஒரு சமயம் நடந்து பலவூர்களுக்குச் சென்று அறவுரை பகர்ந்து வந்தனர். அக்காலத்தில் இந்நாளில் உள்ள வாகன வசதிகள் இல்லை. அதனால் தமிழ்அன்னையாகிய ஔவையார் காலால் நடந்தே ஆங்காங்கு சென்று அரிய பணிகள் பல புரிந்து வந்தனர்.

ஒரு நாள் பகலெல்லாம் நடந்தனர். பொழுது சாய்ந்தது. கால்கள் தடுமாறின. கடும்பசி. இருள் சூழ்ந்துவிட்டது. எங்குப் போவது என்று அம்மையாருக்கு விளங்கவில்லை.

பூதன்

தற்செயலாக எதிரில் ஒரு குடிசை இருந்தது; புல் வேளூர் என்ற ஊர்ப்புறத்தே அக்குடிசை இருந்தது; அதில் பூதன் என்ற விவசாயி இருந்தான். நல்ல பண்புடையவன்: விருந்தினரை உபசரிப்பதில் வல்லவன். கருணையால் கனிந்த உள்ளமுடையவன். அவனுடைய வாழ்க்கைத் துணைவியான மனைவியும் அவ்வண்ணமே அறப்பண்புடையவள்; கணவனுர் கருத்தறிந்து நடப்பவள்.

ஔவையார் அந்தக் குடிசையின் அருகே களைத்து நின்று 'முருகா' என்று ஒரு பெருமூச்சு விட்டார்.

குடிசைக்குள் இருந்த பூதன் என்பான்'முருகா' என்ற குரலைக் கேட்டு விளக்கை யேந்திக் கொண்டு வெளியே வந்து பார்த்தான். பழுத்த பழமாக ஒரு கிழவி இருப்பதைக் கண்டான். ஔவையாரென அவன் அறிந்தானில்லை. ''பாட்டி! தாங்கள் பசித்திருக்கிறுர்போல் தோன்றுகிறது; உள்ளே வந்து எம்மிடம் உள்ளதை உண்டு பசியாறுங்கள்'' என்று மிக அன்புடன் அழைத்தான்.

அன்னமிடல்

ஔவையார் குடிசைக்குள் நுழைந்தார். கிழிந்த பாய் ஒன்றை அவருக்கு இட்டு அதில் அமருமாறு பூதனுடைய மனைவி உபசரித்தாள். கையலம்ப நீரும் தந்தாள். வாழையிலை இட்டாள் பகற்பொழுதில் சமைத்த வரகரிசி யன்னத்தைப் படைத்தாள்; அது விறகுபோல் விரைத்துப் போயிருந்தது!

''தாயே! நாங்கள் பரம ஏழைகள்; எங்கள் வீட்டில் பாலோ, தேனே, பழமோ, உயர்ந்த பிற உணவோ இல்லை. இந்த வரகரிசிச் சோறுதான் இருக்கின்றது. இதனை உண்டு பழகியிருக்கமாட்டீர்'' என்று அந்த வீட்டரசி இனிமை கலந்த குரலில் கூறினுள்.

ஔவையார், ''குழந்தாய்!வீடு தீப்பிடித்து எரியுமானுல் பன்னீர் விட்டுத்தான் அணைக்க வேண்டுமா? தண்ணீர் விட்டால் தீ அணையாதா? அதுபோல் வயிற்றில் எழுகின்ற பசித்தீ, பாதம் அல்வாவினுல்தான் அணையுமா? பழங் கஞ்சி உண்டாலும் அணையுந்தானே? ஆகவே, ஏதாவது தாருங்கள்'' என்றுர்.

துணைக்கறி

இலையில் படைத்த வரகரிசிச் சோற்றில், மூன்று நாட்களுக்கு முன் கடைந்து நுரையுடன் புளித்து இருக்கின்ற மோரை விடுத்தாள்.

துணைக்கறி யாதொன்றும் இல்லை. வீட்டம்மை என் செய்வோம் என்று கருதினுள். தோட்டத்தில் நீளமான கத்தரிக்காய்

கள் செடியில் காய்த்திருந்தன. நீளமான கத்தரிக்காய்க்கு வழுதுணங்காய் என்று பேர். இரண்டு வழுதுணங்காய்களைப் பறித்து அடுப்பில் நன்கு கனேந்துள்ள நெருப்பில்இட்டு வாட்டினாள். வாட்டியவற்றை ஒரு பாத்திரத்தில் இட்டுத் தூயமெல்லிய கரமலரால் பிசைந்தாள். சிறிது உப்பிட்டு அரை எலுமிச்சம் பழம் பிழிந்து, ஈர வெங்காயத்தைச் சிறிது நறுக்கிவிட்டாள். பச்சை மிளகாய் ஒன்று நசுக்கிவிட்டாள். சிறிது காயத்தையும் கரைத்தாள். கரண்டியில் சிறிது நல்லெண்ணெயிட்டுக் கடுகும் கருவேப்பிலையும் உளுத்தம் பருப்பும் இட்டுத் தாளிதஞ் செய்து அதில் கலந்து, பச்சைக் கொத்து மல்லித் தழையையும் அதில் இட்டு விரவினாள்.

மாதவம் செய்தோம்

இப்படிச் சில விநாடிக்குள் தயாரித்த அக்கறியை ஔவையார் இலையில் சூடாகப் படைத்தாள். பூதன் அருகில் நின்று கிழிந்த பனை ஓலை விசிறியால் விசிறினான். ''எங்கள் புண்ணியப் பயனால் வந்த தண்ணருள் நிறைந்த தாயே! தங்கள் வரவினால் நாங்கள் புனிதர்களாக ஆனோம். நாங்கள் பெருந் தவமுடையோம். தங்கள் வரவு நல்வரவு. தாங்கள் உண்டது கோடிப் பேர் உண்டதாகும். தங்களைக் கண்ட கண்கள் நல்ல கண்கள்; எங்கள் குடிசை என்ன மாதவஞ் செய்ததோ?'' என்று கூறினான்.

பூதன் மனைவி, ''பாட்டி! இந்த புல்லிய உணவைத் தங்களுக்குப் படைத்ததற்கு உள்ளம் நாணுகிறது. தங்களைப் பார்த்தால் மிகப் பெரிய தகுதியுடையவர் என்று தெரிகிறது. தங்களுக்குப் பாலும் தேனும் பழமும் சீனியும் படைக்க வேணும். நாங்கள்

அருள்

ஆண்டுச் சந்தா ரூ. 3

வறியவர்கள். எங்கள் வீட்டில் இவைகள்தாம் இருந்தன. சோறும் வரகரிசி; மோரும் புளித்தது. உயர்ந்த கறிகளும் இல்லை. என்னவோ நீங்கள் இவற்றை ஏற்றுக் கொண்டு உண்பதுவே நாங்கள் செய்த மாதவம்'' என்றாள்.

பாட்டிக்கு உபசரிப்பு

இப்படிக் கணவனும் மனைவியும் இன்னுரை கூறிப் படைத்த அந்த உணவை அன்பாகவும் அமிர்தமாகவும் ஔவையார் உண்டார். உண்ட பிறகு கை அலம்பி, பாயில் அமர்ந்து இந்த உணவு எல்லா உலகும் பெறும் என்று ஓர் அருமையான வெண்பாவைப் பாடினார்கள். பாட்டைக் கேட்ட பின்னர் அவரை ஔவையார் என உணர்ந்து மேலும் பயபக்தியுடன் உபசரித்தார்கள்.

அந்த வெண்பாவை இதோ பாருங்கள்:

வரகரிசிச் சோறும்
  வழுதுணங்காய் வாட்டும்
முரமுரென வேபுளித்த
  மோரும்—திரமுடனே
புல்வேளூர்ப் பூதன்
  புகழ்ந்துபரிந் திட்டசோ
றெல்லா உலகும் பெறும்.

ஔவையார், இப்படி அன்புடன் அளித்த அந்தச் சிறுமையான உணவைப் பெருமையாக மதித்துப் பாடினார்கள். அந்த உணவு எல்லா உலகும் பெறும் என்றும் கூறினார்கள்; ஆனால் உண்மையில் இந்தப் பாடல் எல்லா உலகும் பெறும்!

எள்ளுக்குள் எண்ணெய் போல்
எங்கும் வியாபகமாய்
உள்ளஒன்றை உள்ளபடி
ஒருநாள் எந்நாளோ.
கன்னலுடன் முக்கனியும்
கற்கண்டும் சீனியுமாய்
மன்னும்இன்ப ஆரமுதை
வாய்மடுப்ப தெந்நாளோ.
கையுங் குவித்திரண்டு
கண்ணருவி பெய்யஅருள்
ஐயநின்தாள் கீழே
அடிமைநின்றால் ஆகாதோ.
ஆவித் துணையே
அருமருந்தே என்றனை நீ
கூவிஅழைத் தின்பம்
கொடுத்தால் குறைவாமோ.

—தாயுமானவர்

உண்மையாக ஆசைப்பட்டால் ஆண்டவனை அடையலாம். அந்த ஆசை எப்படி இருக்க வேண்டும் தெரியுமா?

இறைவனை அடைவதற்குரிய வழி யாது?

அவனை அடையவேண்டும் என ஆசைப்படுவது ஒன்றே, அதற்குரிய வழியாகும்.

ஆனால், அப்படி ஆசைப்படுகிறவர்கள் எல்லாருமே இறைவனை அடைந்து விடுகிறார்களா?

நம்முடைய ஆசை உண்மையாக இருக்குமானால், இறைவனை நாம் அடைவதும் உறுதிதான். ஆனால் நம்முடைய ஆசைபெரும்பாலும் உண்மையான ஆசையாய் இருப்பதில்லையே!

உண்மையான ஆசை என்றால் அது எப்படி இருக்கும்?

தலையில் ஒருவனுக்குத் தீப்பிடித்துக்கொண்டது என்று வைத்துக் கொள்வோம். அப்போது அவன் என்ன செய்வான்?

தண்ணீரை நோக்கி ஓடுவான்!

அப்படி ஓடுவதற்கு முன்னால், ஒரு கப் காபி சாப்பிட்டுவிட்டு ஓடுவோம் என்று அவன் உட்கார்ந்திருப்பான்?

அல்லது, நம்முடைய மூத்த பெண்ணுக்குக் கல்யாணத்தை முடித்து வைத்துவிட்டு, அதற்கு அப்புறம் தண்ணீரைத் தேடி ஓடுவோம் என்று அவன் தயங்கிக் கொண்டிருப்பானா?

தலையில் தீப்பிடித்துக்கொண்டவன் தன் பெண்டாட்டி, பிள்ளைகள், உற்றார் உறவினர் இவர்களுக்கெல்லாம் செய்யவேண்டிய கடமைகளை ஒன்று பாக்கியில்லாமல் செய்து முடித்துவிட்டு, அப்புறமா நீர் நிலையை நாடி ஓடிச் செல்லுவான்?

யார் எக்கேடு கெட்டால் என்ன? எத்தெருவிலே எவன் போனால் என்ன என்று அல்லவா அவன் ஆர்வர்தோடு நீரைத்தேடி ஓடுவான்? அதுதான் உண்மையான ஆசையின் அடையாளம்!

அத்தகைய ஓர் உண்மையான ஆசையோடு நாம் கடவுளைத் தேடுவோமானால், அவர் அப்போதே நம் கைக்கு எட்டிய கனியாகக் காட்சியளிப்பார்!

அதை விட்டு, நாம் ஆயிரம் ஆசைகளை வைத்துக்கொண்டு, அவற்றோடு 'கடவுளைக் காண வேண்டும்' என்பதையும் ஓர் ஆசையாகக் கொண்டிருப்போமானால், கடவுளை நாம் ஒரு நாளும் காண முடியாது!

அதனாலேயே 'ஆசைகளை ஒழித்துவிடு; அப்போதுதான் நீ ஆண்டவனை அடைய முடியும்' என்றுகூறினார்கள் ஆன்றோர்கள்.

உண்மையாக ஆசைப்பட்டால் ஆண்டவனை அடையலாம்!

கிராம ராஜ்யமே ராம ராஜ்யம்

சரோஜினி வரதப்பன்

பாழ்பட்டு வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கிடந்த பாரத நாட்டிற்குச் சுதந்திரம் பெற்றுத் தந்த பெருமை அண்ணல் காந்தியடிகளுக்கே உரியதாகும. ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்க் கிடந்த பல கோடி பாரத மக்களின் உள்ளத்தே சுதந்திரக் கனலைக் கொழுந்துவிட்டெறியச் செய்தார் அமரர் காந்தி. சொந்த நாட்டிலே பிறர்க்கு அடிமை செய்து அஞ்சிக் கிடந்த இந்நாட்டு மக்களை விடுதலைப் பாதையில் அடியெடுத்து வைக்கக் காந்தியடிகள் தூண்டினர். அயல் நாட்டாருடன் அகிம்சை முறையில் போராட எண்ணிய காந்தியடிகள் அதற்குத் தம் நாட்டு மக்களை ஆயத்தப்படுத்த எண்ணினர். கத்தியின்றி, இரத்தமின்றிச் சுதந்திரப் போரை நடத்தி, வெற்றிகாண விழைந்த அப்பெருமான், அதற்குரிய ஆற்றலையும், தகுதியையும் பாரத நாட்டு மக்கள் பெற ஆசைப்பட்டார்.

கிராம முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம் என்பதைக் காந்தி மகாத்மா கண்டார். அதுவே ராமராஜ்யம் என்று அவர் அறிவித்தார்

பரந்த விரிந்த பாரத நாட்டிலே அந்நியரின் ஆதிக்கம் வாணிபத்தாலே வளர்ந்தது. அயல்நாட்டுப் பொருள்களுக்கு நம் மக்கள் அடிமையாயினர். உப்பிலிருந்து கற்பூரம் வரையிலும், உடுக்கும் உடையிலிருந்து உண்ணும் உணவு வரையிலும் பிற நாட்டார் உதவியின்றிப் பெறவியலாத நிலைமையில் நாம் வாழ்ந்து விட்டோம். இந்நிலை மாறினலன்றி, இந்தியா விடுதலை பெற இயலாது என்பதனைக் காந்தியடிகள் உணர்ந்தார். அதற்கு இந்நாட்டு மக்களின் நிலையை நன்கு ஆராயலானர். பாரத நாடு கிராமங்களால் நிறைந்தது. ஆங்காங்குச் சில பட்டினங்களும் நகரங்களும் உள்ளனவே தவிரக் கிராமங்களையே முற்றிலும் கொண்டது இந்திய நாடு என்பதை அடிகளார் அறிந்தார். எனவே, கிராம முன்னேற்றமே பாரத நாட்டின் முன்னேற்றம்; கிராமங்களின் சுதந்திரமே இந்தியாவின் சுதந்திரம்; கிராம மக்கள் முன்னேற்றமே பாரதத்தின் முன்னேற்றம் என்பதை அவர் உணர்ந்தார்.

கிராமங்கள் தன்னிறைவு பெற்றனவாக விளங்க வேண்டும்.

தமக்குரிய உணவையும் உடையையும் தாமே தயாரித்துக் கொள்ளவேண்டும். அவற்றை அந்நிய ஆலைகள், தொழிற்சாலைகள் உதவியின்றியே இயன்ற வரையிலும் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். ஆங்கிலேய மக்களிடமிருந்து விடுதலை பெறும் முன்னர் அவர்களது தொழிற்சாலைகள், ஆலைகள், இவற்றிலிருந்து நாம சுதந்திரம் பெற வேண்டும் என எண்ணினார். இதற்காக மக்களின் உடையிலே மாற்றம் காண விழைந்தார். மேலை நாட்டுத் துணிகளை நிராகரித்தார். வீடெல்லாம் ''ஆடு ராட்டே சுழன்றாடு ராட்டே'' என்று ராட்டினம் சுழலச் செய்தார். மாதரும் ஆடவரும் கதராடையே கட்டவேண்டும் என்பதை வற்புறுத்தினார். மானம் காக்கும் ஆடைக்குக்கூட வேற்றவரை எதிர்பார்க்கும் வெட்கம் கெட்ட நிலையிலிருக்கிறோமென மக்கள் உள்ளத்தில் விழிப்புணர்ச்சியை ஊட்டினார். கிராம மக்களின் அகக் கண் திறந்தது. சுதந்திர ஞானம் ஒளிவீசத் தொடங்கியது. ஆடைக்கு அடிமையாகும் நிலையைக் கிராம மக்கள் உதறித் தள்ளினர். உடையில் மட்டும் போதாது உணவிலும் மாற்றம் காண விழைந்தார். ஆலையிலே நெல்லரைக்கும் நிலையை அகற்ற விரும்பினார். கைக்குத்தலரிசியைக் கிராமங்களில் மக்கள் உண்ணும்படி தூண்டினார். சோம்பிக் கிடந்த மக்கள் சுறுசுறுப்படைந்தனர்.

அடிகளார் கண்ட தன்னிறைவுத் திட்டம்

உணவு வகையிலே அடிகளார் தானியங்களைக் கைக்குத் தலாலேயே பயன்படுத்த வேண்டும் எனக்கூறியதோடு அமையவில்லை. விவசாயத்திற்கு ஆதாரமாயும் அடிப்படையாயும் உள்ள ஏனைய பொருள்களும், கிராமத்திலேயே கிராம மக்களாலேயே உற்பத்தி செய்யப்பட வேண்டும் எனக் கருதினார். அதோடு நில்லாது, அவ்வாறு உற்பத்தி செய்யப்படும் பொருள்களை மட்டுமே கிராம மக்கள் உபயோகிக்க வேண்டும் எனவும் விரும்பினார். பனைவெல்லம் செய்தல், செக்கிலே எண்ணெய் ஆட்டல், காகிதம், சோப்புச் செய்தல்,தேனீ வளர்த்தல், தேன் சேகரித்தல் போன்ற பல குடிசைத் தொழில்களின் வாயிலாகக் கிராம மக்களுக்கு வேலைகளையும் வழங்கி, சுய தேவையைப் பூர்த்தி செய்ப வேண்டுமென விழைந்தார். இத்கைய திட்டத்தால, மக்கள் மனத்திலே சுதேச உணர்ச்சி மலர்கிறது. அன்றியும் உணவு, உடை, தொழில் போன்ற துறைகளில் கிராமங்கள் தன்னிறைவு பெறுகின்றன. கிராமத்தின் வருவாயும் வெளியே செல்லாமல் அம மக்களுக்கே பயன்படுகிறது.

அடிகளார் கண்ட இந்தத் தன்னிறைவுத் திட்டத்தை நாட்டிலுள்ள மக்களனைவரும் உண்மையாகக் கைக் கொண்டால் உணவுக்கும் உடைக்கும் பிறரை எதிர்பார்த்து நிற்கும் பேதமை நிலைமை மறையும்; பஞ்சமும் வறுமையும் கிராமங்களை வாட்டாதொழியும்; எடுத்ததற்கெல்லாம் அயலாரை எதிர்பார்க்கும் இழிந்த நிலையும் ஒழிந்து போகும்.

அரசியலிலும் புரட்சி கண்ட அண்ணல்

இவ்வாறு உணவு, உடை இரண்டிலும் மாற்றம் கண்ட மகாத்மா அரசியலிலும் மாபெரும் புரட்சி காண விரும்பினார். ஓரிடத்தே குவிந்து கிடக்கும்

அதிகாரமும் ஆட்சி முறையும் கிராமங்களுக்குப் பரந்து செல்ல வேண்டும். 'நம் ஊர்', 'நம் மக்கள், நமது கிராமம்' என்ற உணர்ச்சி கிராம மக்கள் உள்ளத்தே கிளர்ந்தெழ வேண்டும். இதற்குத் தக்க வழி பஞ்சாயத்தாட்சியே என முடிவு செய்தார். பட்டி தொட்டிகளில் வாழும் பாமரனும், ஆட்சியின் நுட்பத்தை அறிய அதுவே தக்க வழி எனக் கண்டார்.

'கிராம ராஜ்யமே ராமராஜ்யம்' என்ற கீதம் எங்கும் முழங்கச் செய்தார். இன்று அடிகளார் கண்ட பஞ்சாயத்தாட்சி பாரத நாடு முற்றிலும் பரவியுள்ளது. அதனால் விளையும் மகத்தான பயனை நாம் அனைவரும் கண்ணுறக் காண்கிறோம். பாரத நாட்டின் நரம்புகளாக உள்ள பல்லாயிரக்கணக்கான கிராமங்கள் தழைத்து ஓங்கக் கிராம ஆட்சியே சிறந்ததென அடிகள் நிரூபித்துக் காட்டினார். □



நாரதர் தோற்றார்!

நாரதர், பரந்தாமனிடம் ஒரு சந்தேகம் கேட்டார். சந்தேகம் தெளிந்தது. அவருக்குக் கிடைத்தது என்ன? தோல்வி!

நாரதர், ஒரு நாள் எம்பெருமான் கண்ணபிரானிடம் வந்தார். ''ஐயனே! அடியேனுக்கு ஒரு சந்தேகம். அதைத் தெளிவித்துப் போகவே வந்தேன்'' என்றார். ''அப்படியா, நாரதரே! தங்கள் ஐயம் என்ன?'' ''எம்பெருமானே, வேறொன்றுமில்லை. பூலோகத்தில், தங்கள் பால் சிறந்த பக்தியுள்ள பக்திமான் யார் என்று அறிய அடியேனுக்கு ஆவல்.'' ''அப்படியா, நாரதரே, மகிழ்ச்சி. பூலோகத்தில் சிறந்த பக்திமானாகத் திகழ்பவர் எனது பக்தன் அங்குசம் செட்டியார் ஆவார்.'' ''பிரபோ! அவர், அப்படியென்ன அதிசிரத்தையெடுத்துத் தங்களுக்குப் பூசை செய்கிறார்?''

''அதை நீரே சென்று கண்டு வரவும்'' என்றார் பரமாத்மா.

நாரதர் மானிட உருவில் அங்குசம் செட்டியாருக்கு விருந்தினராக வந்தார். செட்டியாரின் பக்தி சிரத்தைகளைக் கவனிக்கலானார். செட்டியார் தினமும் காலையில் எழும்போது 'கிருஷ்ணா' என்று ஜபித்துக்கொண்டு எழுகிறார். தமது வேலையெல்லாம் முடித்துவிட்டுத் தினமும் இரவு உறங்கும்போது 'கிருஷ்ணா!' என்று ஜபித்துக் கொண்டே உறங்குகிறார். நாரதருக்கு ஆச்சரியம்! 'கிருஷ்ணா' என்று ஒரு நாளைக்கு இரு தடவை கூறுபவரா சிறந்த பக்தர்? நாரதர் மீண்டும் கிருஷ்ண பரமாத்மாவிடம் வந்தார்.

''பிரபோ! தங்கள் பக்தர் பெரிய பக்திமான் என்று நினைத்திருந்தேன். ஆனால் நாளுக்கு இரு முறை உம்மை நினைப்பவரா சிறந்த பக்தர்?'' என்று கேட்டார.

''நாரதரே!'' என்றழைத்தார் பரமாத்மா. அவர் கையில் வழிய வழிய எண்ணெய் நிரப்பிய பாத்திரம் இருந்தது. நாரதர் விழித்தார். ''இதை நீங்கள் எடுத்துக் கொண்டு ஏழுலகங்களையும் ஏழு கடலையும் சுற்றி வரவும். ஆனால் ஒரு நிபந்தனை. இந்த எணணெய்யில் சிறிதுகூட வழிந்திருக்கக் கூடாது!'' ''உத்தரவு பிரபோ!'' என்று நாரதர் புறப்பட்டார். மூன்று தினங்கள் கழித்து நாரதர் வந்தார். ''பிரபோ, தாங்கள் சொன்ன பணியைத் தவறாது செய்துவிட்டேன். எண்ணெய் சிறிதுகூட வழியவில்லை.''

''சந்தோஷம்! சரி, இந்த மூன்று தினங்களில் எனனை எத்தனை முறை நினைத்திருப்பீர்?'' என்றார் இறைவன்.

''பிரபு, தங்களை நினைப்பதற்கு எனக்கு எங்கே நேரம்? இந்த எண்ணெய்ப் பாத்திரத்தை வழியாது பிடித்துக்கொள்ளவே சரியாய்இருந்தது'' என்றார் நாரதர்!

''நாரதரே, தெய்வப் பிறவியான நீரே இந்தச்சிறுவேலையைச் செய்வதற்குள் என்னை மறந்துவிட்டீரே, சாதாரண மானிடப் பிறவியான அங்குசம் செட்டியார் எத்தனை துன்பங்களிடையே தினம் இரண்டு தடவையாவது மறவாது என்னை நினைக்கிறாரே, தெரியவில்லையா?'' என்றார்!

நாரதர் நாணித் தலை குனிந்து நின்றார்!

—எம்ஏபி